
சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2009
தை 2
ஸபர் 5
ஞாயிறு (15-1-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 63
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 60

## தமிழீழத் தந்தைக்கு நினைவாலயம்

தமிழ்ஈழத் தந்தை மூதறிஞர் செல்வா அவர்களின் நினைவாலயத்துக்கு பொங்கலன்று (14.1.78) மாலை 4 மணிக்கு அடிக்கல் நாட்டப்படுகிறது. அடிக்கல்லில் பொறிக்கப்படவிருக்கும் செப்பேட்டுவாக்கியம் வருமாறு;-



### செப்பேட்டு வாக்கியம்

கலியுகம் 5079 பிங்களம் திருவள்ளுவர் 2008 ஹஜரி 1397 கிறிஸ்தவ 1978 கொல்லம் 1152 ஆண்டு தைப்பொங்கல் தைமுதல் ஸபர் நாலு சனவரி பதினன்கு நாழிகை இருபத்தைந்துமாலை நான்கு மணிக்கு நடைபெறும் நாற்பது லட்சம் தமிழர்களின் தன்னிகரில்லாத் தலைவன் தமிழ்ஈழத் தந்தை மூதறிஞர் அமரர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்களின் நினைவாலய அடிக்கல் நாட்டு விழா நினைவுச் செப்பேடு. தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழு.

# எட்டிப்பார்க்கிறது ஏகாதிபத்திய சிங்களம்!

## கொட்டமடக்கிட எழுகிறது தமிழ் ஈழம்!

## சிங்களப் போதனை இங்கு வேண்டாம் செந்தமிழ் மரபு சிதைத்திட வேண்டாம்!

மும்மொழித் திட்டம் என்ற போர்வையில் இணைப்புமொழி என்ற உருவத்தில் தமிழ்ப்பாடசாலைகளுக்குள் நுழைய விருக்கும் ஆதிக்க சிங்களத்தை விரட்டியடித்திடவும், செந்தமிழ் மரபும் தனித்துவமும் காத்திடவும் தமிழ் இளைஞர் பேரவையும் தமிழ் மாணவ அமைப்புக்களும் பெற்றார் சங்கங்களும் இப்போது திட்டங்கள் தீட்டி வருகின்றன. தமிழினத்தின் மீது ஆட்சி நடத்தும் ஏகாதிபத்திய மொழியான சிங்களத்தை—தமிழினத்தின் அடிமைத்தனத்தை பிரதிபலிக்கும் சிங்களத்தை—தமிழ் மாணவர்கள் மீது திணிக்க எடுக்கப்படும் ஒவ்வொரு முயற்சியையும் எதிர்த்துப் போராடி அவற்றை முறியடித்திட இளைய தமிழ் சமுதாயம் வீறு கொண்டு ஆர்ப்பரித்து எழுகிறது!

## சிலிர்த்தெழுகிறது தமிழ் மாணவ சமுதாயம்! திட்டங்கள் உருவாகிறது போராட்டத்துக்கு!

## கல்வியமைச்சரின் விபரீதப் போக்கு! கைவிடாவிட்டால் கறுப்புக்கொடி?

1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் என்ற ஏகாதிபத்திய சட்டம் தமிழ் மக்களின் பலமான எதிர்ப்பின் மத்தியில் நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை, கடந்த 22ஆண்டுகளாக தமிழ் பாடசாலைகளில் சிங்களத் திணிப்புக்கு எதிராக தமிழ் மக்கள் போராடி வந்திருக்கிறார்கள்; இதில் வெற்றியீட்டி வந்திருக்கிறார்கள்.

நிறைந்த கல்விமானும், சிறந்த தேசிய வாதியுமான அமரர் ஹண்டி பேரின்பநாயகம் அவர்களும் தமிழ் ஈழத்தின் ஏனைய பல அறிஞர்களுமாகச் சேர்ந்து 1956 ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டததின் பின்னர் தமிழ் பாடசாலைகளில் சிங்களம் போதிப்பதை அனுமதிப்பதில்லையென்று தீர்மானம் நிறைவேற்றி அதை நடைமுறைப்படுத்தினார்கள்.


இதன்பின் கடந்த 22ஆண்டுகளாக, பெற்றார் விரும்பும் மொழி, மூன்றாவது மொழி என்று பல்வேறு உருவங்களில் தமிழ் பாடசாலைகளில் சிங்களத்தை திணிப்பதற்கு சிங்கள அரசாங்கங்கள் எடுத்தநடவடிக்கைகள் அனைத்தையும் தமிழ் சமுதாயம் ஒன்றுபட்டு எதிர்த்து நின்று தனது உறுதியையும், பிடிவாதத்தையும் காட்டி வந்திருக்கிறது.

1966ம் ஆண்டு இன்றைய இதே யூ. என். பி. அரசின் அன்றைய கல்வியமைச்சர் இரியகொல்ல, மும்மொழித் திட்டத்தைபுகுத்த முயன்ற [illegible] ரசுக்கட்சி அதை எதிர்த்து முறியடித்தது.

இப்போது மீண்டும் ஜே.ஆரின் யூ.என்.பி ஆட்சியில் இணைப்பு மொழி என்ற வடிவத்தில் தமிழ் பாடசாலைகளில் ஆதிக்க மொழியான சிங்களத்தை நுழைக்க முடிவு எடுத்து விட்டார்கள் அதற்கான உத்தரவுகள் சுற்றறிக்கைகள் தமிழ் பாடசாலைகளுக்கு அனுப்பப் பட்டு விட்டன.

அதுவும், எந்தச் சட்டத்தின் பின் தமிழ் மக்கள் சிங்களத்தை படிக்க மறுத்து 22 ஆண்டுகளுக்கு முன் சிங்கள ஆசிரியர்களைத் திருப்பி அனுப்பினார்களோ — அதே ஏகாதிபத்திய சிங்களம் மட்டும் சட்டத்தில் ஓர் அட்சரமும் மாற்ற முடியாது என்று பிரதமர் ஜே. ஆர். தேசிய அரசுப் பேரவையில் ஆங்காரமாக அறிவித்த பின்னர், சிங்களம் திணிக்கப்படுகிறது 1956ம் ஆண்டு சிங்களச் சட்டத்தால் எந்த நிலைக்கு தமிழினம் தள்ளப்பட்டதோ அந்த நிலையிலிருந்து ஓர் அங்குலம்கூட மாற்றம் நிகழாத நிலையில் — மாற்றம் செய்ய மாட்டோம் என்று பிரதமரே அறிவித்து விட்ட நிலையில் — சிங்களத்தை தமிழ் மாணவர்கள் எவ்வாறுபடித்திட முடியும் என்று தமிழ் அறிஞர்கள் கேள்வியெழுப்புகிறார்கள்.

—8-ம் பக்கம் பார்க்க




தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்தியும் விமர்சனமும்

அமைச்சர் 'தேவா' துணைப்பிரதமர் ஆவாரா?

—செய்தித் தலைப்பு

எதற்கோ குஞ்சம் கட்டி விட்டதுபோல இது ஏன்? ஜே. ஆர். ஜனாதிபதி ஆன பின்னர் பிரதமர் அதிகாரமற்ற வெறும் தலையாட்டிப் பொம்மை; அந்தத் தலையாட்டிப் பொம்மைக்கும் இன்னோர் தஞ்சாவூர்ப் பொம்மை தேவையா? தஞ்சாவூர்ப் பொம்மைகளால தமிழினம் ஏமாறாது!

இலங்கையில் பிச்சை எடுப்பதையும், கொடுப்பதையும் தடுக்க சட்டம் வரும்.

—செய்தி

— அதற்கு முன், "சிறீலங்காவின்" அமைச்சர்கள் வெளிநாடுகளிடமும் சர்வதேச நாணயசபையிடமும் உலகவங்கியிடமும் யாசகம் செய்வதற்கு தடைவருமா என்று கேட்கிறார் ஒரு பிச்சைக்காரர்.

"பிரதேசம் சிறியதாயினும் தலைமைப்பீடத்தின் உறுதி அவசியம்"—கியூபா புரட்சி விழாவில் அமிர் பேச்சு!

—செய்தித் தலைப்பு

— அதனால்தான் தமிழ் ஈழ நாட்டின் தலைமைப் பொறுப்பிலுள்ள கூட்டணித் தலைமைப் பீடத்திடம் சிறிது தளர்ச்சி காணப்பட்டாலும் தமிழ் இளைஞர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை!

மந்திரி சபையில் அங்கம் வகிக்கும் நான் சுயநிர்ணய உரிமையை ஏற்றால் அதனை அரசும் ஏற்றதாகவே பொருள்படும்—

—நீதிமந்திரி தேவநாயகம்.

— சுயநிர்ணய உரிமை பெரிய விடயம்; அது கிடக்கட்டும், கதிர்காமத்திலுள்ள ராமகிருஷ்ண மடம் இந்துக்களிடம் திருப்பிக் கொடுக்கப்படும் என்று "அமைச்சரவையில் அங்கம் வகிக்கும்" நீங்களே ஆட்சிபீடமேறியவுடன் பத்திரிகைகளில் அறிவித்திருந்தீர்கள்—அந்த சின்ன விஷயத்திலேயே நீங்கள் சொன்னதை அரசு இதுவரை ஏற்கவில்லையே! ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போதுமல்லவா?

சுயநிர்ணய உரிமை என்பது விவாகரத்து சட்டம் போன்றது.

—வி. பி.

தமிழ் ஈழமும், (சிங்கள) சிறீலங்காவும மனமொத்து திருமணம் செய்துகொண்டதில்லை. 1833ல் கோல்புறூக் என்ற ஆங்கிலேயன் செய்துவைத்த கட்டாயக் கல்யாணத்தின் விளைவே இலங்கைத்தீவின் இன்றைய இனப்பிரச்சினை இந்தக் கட்டாயக் கல்யாணத்தை ரத்துசெய்வதற்கே சுயநிர்ணய உரிமை என்ற விவாகரத்துச் சட்டம் தேவைப்படுகிறது!

தமிழ்—சிங்கள இனப் பிரச்சினை குறித்து அரசு—கூட்டணி எம்பீக்களின் நல்லெண்ணக் கலந்துரையாடல்.

—செய்தித் தலைப்பு

— இந்த நல்லெண்ணக் கலந்துரையாடலுக்கு செல்லும் கூட்டணி பா. உக்கள் அன்றையதினம் தங்கள் தலையில் நல்லெண்ணெய் வைத்துக்கொள்ளாமல் போவது அவர்களுக்கு நல்லது என்கிறான் நம் ஆபீஸ்பையன்.




நி. கிருபானந்த மூர்த்தி
குவாரி வீதி
தெஹிவளை.

கே: தனிநாடு தடைச் சட்டம் வருமானல் கனகரத்தினத்தைப்போல ஏனைய பா. உக்களும் கட்சிமாறுவார்களா?

ப: இதற்குக் காலம்தான் பதில் சொலல வேண்டும்!

கே: துரோகிகள் பாராளுமன்றம் போகக்கூடாது என்பதற்காக 77ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய கூட்டணி, துரோகி கனகரத்தினம் போன்றவர்களுக்கு மாவட்ட அமைச்சர் பதவி கிடைக்கவிருப்பதை தடுப்பதற்காக தன்னும் மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்குமா?

ப; குளிக்கப் போய் சேறு பூச வேண்டுமென்கிறீர்களா? துரோகத்தைத் தடுக்கப்போனவர்களே துரோகிகளாக மாறவேண்டுமென்கிறீர்களா? மற்றோர் உண்மை தெரியுமோ? அரசாங்கக் கட்சியில் இருப்பவர்களுக்கே மாவட்டமந்திரி பதவி வழங்கப்படுமாம்; அப்படியானல், கூட்டணி பா. உக்கள் அரசாங்கக் கட்சியிலும் சேரவேண்டுமென்று கூறுவீர்களோ?

ஃ

செல்வி. சாந்தபவானி
இருதயபுரம்,
மட்டக்களப்பு.

கே: இளைஞருக்கு சமமாக எங்களைபோல் பல யுவதிகளும் தமிழ் ஈழ விடுதலைப்போராட்டத்தில் இறங்க விரும்புகிறோம். அது பற்றி உங்களின் கருத்தென்ன?

ப: நினைத்ததை செய்து முடிக்கும் ஆற்றல் இயல்பாகவே பெண்களுக்கு உண்டு. ஈழ விடுதலைப் போராட்டத்தில் தமிழ்த் தாய்க்குலம் இறங்கும் நிலை வந்துவிட்டால் சுதந்திர ஈழம் உருவாகுவதை எந்த சக்தியும் தடைசெய்துவிட முடியாது. வாழ்க! வளர்க உங்கள் விடுதலை உணர்ச்சி!

ஃ

க. மாணிக்கம்,
அச்சுவேலி வடக்கு

கே: சொக்குப் பொடி என்றால் என்ன? அது எங்கே கிடைக்கும்?

ப: பிரதமர் ஜே. ஆர். அவர்களின் பேச்சிலும், அவரது புன்சிரிப்பிலும் அது கிடைக்கும்!

ஃ

பொன். யேந்திரன்
பொன். சிவமணி,
கொழும்பு, 11

கே: கலவரத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவி கொடுப்பதற்கு வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் ஏன் தமிழ் இடம் பெறவில்லை!

ப: அந்தப் பணம் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு போய்ச்சேரப்போவதில்லையென்பதற்கு இது ஒரு சூசகமான அறிவிப்பாக இருக்கலாம்!

ஃ

செல்வி வி. மேகலா,
இருதய புரம்,
மட்டக்களப்பு.

கே; தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எப்போது தவறு செய்வார்கள்; அதைப் பார்த்து ஏளனம்பண்ணிச் சிரிக்கலாம் என்று காத்திருப்பவர்களைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்? அவர்கள் தமிழர்கள் தானு?

ப: தமிழினத்தால் கடந்த பொதுத்தேர்தலில் மூக்கறுக்கப்பட்டவர்கள் அவர்கள் கூட்டணியோடு முட்டி மோதி முதுகெலும்பு முறிந்து போய்க்கிடப்பவர்கள் அவர்கள்—அவர்கள் எண்ணம் ஈடேறப்போவதும் இல்லை!

ஃ

அ. க. சுந்தரலிங்கம்,
க.பொ.த(சாதாரணம்)
இந்துக்கல்லூரி,
பம்பலப்பிட்டி.

கே: இலங்கையில் வாழும் தமிழர்களில் சிலர் தமது உடமைகளும், சுதந்திரமும் பறிக்கப்படுவதால் வெளியூர்களில் சென்று வாழலாம் என நினைக்கிறார்கள் இவர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப; தமிழன் தான் வாழ்ந்து வரும் தன்னுடைய சொந்தத்தாயகத்தில் உரிமையை நிலைநாட்டி தனது வாழ்வுக்கு வழிதேடாமல் திரைகடலோடத்தொடங்கியதனால் தான் இன்று அடிமை வாழ்வு வாழ்கிறான்—போராடி இங்கு நமது சுதந்திரத்தை நிலை நாட்ட வேண்டுமே தவிர, நாட்டைவிட்டு ஓடுவதை நான் ஆதரிக்க வில்லை!

ஃ

சி.வசந்தகுமார்,
யூனியன் கல்லூரி,
தெல்லிப்பளை.

கே: யூ. என். பி. அரசாங்கம் புதிய அரசியல் அமைப்பு மூலம் தமிழினத்திற்கு சம உரிமை வழங்கின் இதனைக் கூட்டணி ஏற்குமா? அடுத்த அரசாங்கத்தால் இச் சம உரிமைபறிக்கப்பட்டால்இது எமக்கு நிரந்தரமற்ற தீர்வாக அமையலாம் அல்லவா. அத்துடன் எமது தனிநாடு போராட்டம் மேலும் ஆறு வருடங்கள் பின் தள்ளப்படலாம் அல்லவா?

ப: கூட்டணி தனிநாடு என்பதைத்தவிர வேறுஎதையும் ஏற்க முடியாது: அதற்கு அதிகாரமும் கிடையாது, நாம் தமிழ் ஈழ அரசை அமைப்பதன் மூலமே, சிங்களவர்களோடு சமதை உள்ளவர்களாக விளங்கலாமே தவிர—வேறு எந்த முறையாலும் சமத்துவத்தையடைய முடியாது. தனிநாட்டுப் போராட்டம் இனியும் பின்தள்ளப்படதமிழ்மக்கள் அனுமதிக்கமாட்டார்கள்

ஃ

எஸ். வசந்தன்,
"கணேஸ்வரம்"
அளவெட்டி.

கே: புதிய மாவட்ட பிரிவுகளை அமைப்பதன் மூலம் வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களில் உள்ள சிங்களப் பகுதி, அடுத்துள்ள சிங்கள மாவட்டங்களுடன் சேர்க்கப்படின் எமது தமிழ்ப்பிரதேசத்தின் பரப்பளவு குறைகின்றதல்லவா? இதனை முளையிலே களைய வழி கூறுங்கள்?

ப: இதனை நாம் எதிர்க்கலாம்; ஆனல் தடுக்கக்கூடிய அதிகாரம் எம்மிடமில்லை; தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமாக இருந்து திட்டமிட்ட சிங்களகுடியேற்றத்தினல் சிங்களப் பகுதிகளாக மாற்றப்பட்டுள்ள இந்தப் பகுதிகளை மீட்பதற்கு, நமக்கென்றோர் அரசு அமைந்த பின்னரலே தான் ஏற்றநடவடிக்கைகளை எடுக்க முடியும் — நம் நிலத்தை மீட்க முடியும்!

ஃ

செல்வி. ஆர். யோகேஸ்வரி,
மகளிர் ஒழுங்கை,
சாவகச்சேரி.

கே: 'தமிழ் ஈழம்' அமைக்கும் இலட்சியத்தில் உங்களுடன் சேர்ந்து நானும் தமிழ் ஈழம் அமைக்கப் போகின்றேன்—இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

ப: வரவேற்கிறேன். உங்களைப் போன்ற ஒவ்வொரு தமிழ் சகோதரியும் இந்த முடிவுக்கு வந்து விட்டால் தமிழ் ஈழப் போராட்டம் நிச்சயம்வெற்றியைபெற்றே தீரும்.

ஃ

எம்.ஏ.அமீனுடீன்,
பிஸ்கால் றோட்,
அக்கரைப்பற்று-3.

கே: பொத்துவில் (பா.உ) கனகர் தனக்கு இடி விழாமல் காத்துக்கொள்ள உகந்தைக் கடவுள் இருக்கிறார்—என்று கூறுகிறாரே, இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்;

ப: தமிழ் ஈழத்தின் கிழைத்தென் கோடியில் தமிழ் ஈழத்தின் எல்லையில் தமிழினத்தை காப்பதற்காக கையில் வேலுடன் காத்திருக்கும் உகந்தை முருகன் தமிழ்த்துரோகிகளுக்கு ஒரு போதும் துணை போகமாட்டார்.

★ கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

திருவாளர் குயுக்தியார்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## கிளிநொச்சியில் உழவர் விழா

கிளிநொச்சி பிரதேச முத்தமிழ் நுண்கலைக்கழகம்தைப் பொங்கல்நன்னளை முன்னிட்டு 16-1-78 திங்கட்கிழமை வெகு விமரிசையாக உழவர் விழா ஒன்றை நடாத்த ஆவன செய்துவருகின்றது. இதனையொட்டி கிளிநொச்சிப் பிரதேச மாணவர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோருக்கான போட்டிகளையும் நடாத்த கழகம் முன்வந்துள்ளது: கட்டுரை, சிறுகதை, புளுகு, நாடகம், விநோதஉடை, ஆகியனவும் ஆணழகன்போட்டி, சைக்கிள் ஓட்டப்போட்டி கலாச்சார ஊர்த்தி பவனிப்போட்டி ஆகியனவும் நடைபெற உள்ளன.

காலைநிகழ்ச்சிகளாக கராட்டி, மல்யுத்தம், ஜல்லிக்கட்டு,சிலம்படி ஆகியனவும், மாலைநிகழ்ச்சியாக அலங்கார ஊர்த்திப்பவனியும், இரவுநிகழ்சிகளாக பட்டிமன்றம், கவியரங்கு,சிறப்புச் சொற்பொழிவு, நடனம், இசை,நாடகங்கள் ஆகியனவும் இடம்பெற உள்ளன.

திருவாளர்கள்:- நா.சோதிநாதன், க. செ. வீரசிங்கம் ப.வை. ஜெயபாலன் பொன்:தில்லைநாயகம், சி' பாக்கியநேசர், ஐ. துரைராசா, ஐ. திருஞானம் ஆகியோர் கொண்ட விழாக்குழு அமைப்பு வேலைகளுக்கு செயற்பட்டு வருகின்றது போட்டிகளுக்கான விபரங்கள் விண்ணப்பங்களுக்கு செயலாளர் மே/பா அக்றோ றேட்ஸ்,பிரதான வீதி, கிளிநொச்சி. என்ற விலாசத்துக்கு தொடர்பு கொள்ளும்படி கிளிநொச்சிப் பிரதேச மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்களமாடினும் சிங்களம் ஏற்றிடோம்!

**அன்பு நண்பா**

கங்குல் அகன்றது; எங்கணும் மகிழ்ச்சி துளிர் விட்டது; கூதிர்காலம் மறைந்தது; குளிர் அகன்றது; பனி தொலைந்தது; பசியும் பிணியும் நீங்கி, வசியும் வளனும் சுரந்தது; கூவின பூங்குயில், கூவின கோழி; குருகுகள் இயம்பின; சங்கம் முழங்கியது; இளம்பரிதியின் பொன்னிற ஒளிக்கற்றைகள் தகதகாயம் காட்டியபடி உலகை ஒளிவெள்ளத்துள் ஆழ்த்துகின்றன; முரசொலியும், முழவொலியும், குழலோசையும் குயிலோசையும் இவற்றையெல்லாம்விட சுவையூட்டும் குழவிகளின் மழலையோசையும் செவிகளுக்கு இனிமையூட்டுகின்றன; சுரண்டலும் சூதும், அங்கேயில்லை—இருண்டமனத்தினர் அங்கேயில்லை—சாதியும் மதப்பூசலும் அங்கேயில்லை — எல்லார்க்கும் எல்லாம்—எல்லோரும் ஓர் குலம்—எல்லோரும் ஓர் நிறை என்பதே அவ்விடத்து வாழ்க்கை நெறி!

'பொங்கலோ பொங்கல்' என்ற பேரொலியே எங்கணும் எழுகிறது; தை பிறந்தது, தமிழக்குலமே எழுந்திரு — கைசோர மெய்சோர உழைத்திட்டோம் — கடமை செய்தோம்—பயன் கண்டோம்; இன்று எங்கள் தை நாளும் மலர்ந்ததையா, தமிழர் நாம் ஒன்றுபட்டு விழா எடுப்போம்—கையோடு கை சேர்த்து களிகொள்வோம் வாரீர் என்று பண்பாடிய படி தமிழ் மாந்தர் எழுகின்ருர்; புதுப் புனலாடி, புத்தாடை. பூச்சரங்கள் அணிந்தபடி பூவையர்கள் வருகின்ருர்; மாக்கோலமிடுகின்ருர் மகிழ்ச்சிக் கோலம் அலைபுரள; பழையன கழிந்து புதியன கொண்டு பொங்கல் இடுகின்ருர்—புதுப்பானை, புத்தடுப்பு, புத்தரிசி, புதுபபால், புதுவெல்லம், புதுநெல், இஞ்சி, மஞ்சள், இவற்ருேடு செங்கரும்பு, செங்கதலி மா,பலா மற்றுமுள பழவகைகள் அனைத்தும் சேர்த்து பொங்கல் பொங்குகிருர் பூரிப்பு பொன் முகத்தில் இழையோட! காதலியர் படைக்கின்ற பொங்கலின்பச் சுவையுண்டு காளையர்கள் மகிழ்கின்ருர் — கவிதை பல படைக்கின்ருர்!

வீதியெங்கும் விழாக்கோலம்—அறிஞர் தம் இதய ஓடை ஆழ நீர்மொண்டு அறிவுத்தாகம் தணித்திடும் சொற்பொழிவுகள்! பட்டிமன்றங்கள் ஆங்காங்கே! அடிமை நிலை ஆங்கில்லை பகைவன் தொல்லை ஆங்கில்லை; வறுமையும் பிணியும் ஏழ்மையும் ஆங்கில்லை—சாதியும் மதபேதமும் அங்கில்லை—எனவே தமிழ் மக்கள் ஒரு தேசிய விழாவாக பொங்கல் திருநாளை இவ்வாறு கொண்டாடி மகிழ்வதிலே — குதூகலிப்பதிலே குறைதான் ஏது?

ஆம் நண்பா, நாம் சுதந்திரமுள்ள மக்களாக இருந்திடின் நம்முடைய தமிழ் ஈழ நாட்டை நாமே ஆளுகின்ற சூழ்நிலை இருந்திடின்—தமிழினத்தின் தேசியத் திருவிழாவான பொங்கல் திருநாளில் நான் மேலே கூறிய அளவு மட்டுமா களிப்பும் குதூகலமும் இருந்திடும்? இன்னும் சுவையும் பயனும் அளித்திடத்தக்க விதத்திலே தமிழ்ஈழம் தை முதல்நாளில் விழாக்கோலம் பூண்டிடுமன்ருே!

ஆனால்—நாம் இன்று பொங்கல் விழாவினை மகிழ்ச்சியுடன் குதூகலமாகக் கொண்டாடக் கூடிய நிலையிலா இன்று இருந்திடுகிருேம்? தை பிறந்தால் வழிபிறந்திடும் என்று மனச் சாந்திக்காக கூறுகிருேமே தவிர — எத்தனை தை வந்து போய்விட்டது; நம் அடிமைத் தனம் துடைக்கப்பட வழிபிறந்ததா? மிடிமை தொலைந்ததா? சுரண்டல் ஒழிந்ததா? வேண்டாத சாதிபேதம் அழிந்ததா? நாம் தமிழர் என்கிற தேசிய இன உணர்வை — நாம் தமிழ் ஈழ நாட்டினர் என்ற ஒருமைப்பாட்டு உணர்வை—பெற்றுவிட்டோமா? என்கிற கேள்விகளை நாம் எழுப்பிடுவோம் இத் தை நாளில்!

1977 ஆவணியில் சிங்கள ஏகாதிபத்திய வெறியர்களால் கொன்று குவிக்கப்பட்ட தமிழர்களின் ஆவி இன்னும் அடங்கிட வில்லை; அப்போது குற்றுயிரும குலையுயிருமாக சித்திரவதைக்காளாகி அணு அணுவாக உயிர்விட்ட அப்பாவித் தமிழர்களின் ஆத்மா இன்னும் அமைதியடையவில்லை—மானம் பறிக்கப்பட்ட மங்கையர்கள்—கற்பழிக்கப்பட்ட தமிழ்த் தங்கையரின் கண்ணீருக்கு இன்னும் பதில் காணப்படவில்லை; ஏதுமற்ருேராய் நாதியற்ருேராய் நடுவீதியிலே விரட்டியடிக்கப்பட்டு தமிழ் ஈழமே தஞ்சமென வந்தடைந்த அகதிகளின் துயரம் துடைக்கப்படவில்லை! இவ்வாறு வேதனைக்கடலிலே வெந்துகொண்டிருக்கும் தமிழனது இல்லத்திலே இந்த ஆண்டு பால் எப்படிப் பொங்கும்? உள்ளமன்ருே பொங்கியெழும்?


காலிருந்தும் முடமாக்கப்பட்டது போல, செவியிருந்தும் செவிடாக்கப்பட்டது போல—கண்ணிருந்தும் குருடாக்கப்பட்டது போல்—நாடிருந்தும், நாட்டின் ஆட்சியுரிமையும் இறைமையும் எம்மிடமிருந்து தட்டிப் பறிக்கப்பட்டு, நாம் முடவர்களாய், செவிடர்களாய். குருடர்களாய், அடிமைகளாய் வாழ வேண்டிய நிலைக்குத்தள்ளப் பட்டிருக்கிருேம்! இந்த நிலையை மாற்றியமைத்து நமது நாட்டை மீட்டிட—நமது விடுதலையை நிலை நாட்டிட நமது தனித்துவத்தைக் காத்திட—நாம் எதிர்காலத்தில் ஆற்றிட வேண்டிய பணிகளைப் பற்றி சிந்திக்க வேண்டிய நாள்—தை முதல் நாள்!

ஆம் நண்பா, நமக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு—சுதந்திரத் தமிழ் ஈழம் மலர்ந்தே தீரும் என்கின்ற அந்த அசையாத உறுதி நம் நெஞ்சிலே ஒளிவிடினும் — அந்த இலட்சிய புரியை—சுதந்திர பூமியை நாம் சென்றடைவதற்கிடையிலே விடுதலைப் பாதையில் நாம் சந்தித்திட வேண்டிய துன்பங்கள், துயரங்கள். இழப்புக்கள் மலைபோலே வரலாம்—அவற்றையெல்லாம்சந்திக்கிற துணிவை மனத்திட்பத்தை — நாம் வளர்த்துக் கொண்டாக வேண்டும்!

நாம் தமிழர்கள் இத்தீவுக்கு வந்தேறு குடிகள்; சிங்களவர்களின் படைகளிலே கூலி வேலை செய்வதற்கு இங்கு வந்தவர்களின் பரம்பரையினரே இற்றைத் தமிழர்கள் என்று கூறி வரலாற்றையே திரித்து—நமக்கு இத்தீவிலே இருக்கின்ற உரிமையை மறுதலிக்கவும் நமது இளம் மாணவ சமுதாயத்தின் மத்தியிலே நமக்கிங்கு உரிமையில்லையென்கிற ஓர் தாழ்வு மனப்பான்மையையூட்டி அடிமை உணர்வை வளர்த்திடவும் திட்டமிட்டு பாடநூல்களிலே பாஷாணம் தடவப்படுகிறது; அந்த அடிமைக் கல்வி நமது மாணவ செல்வங்களுக்கு ஊட்டப்படுகிறது! இது ஒரு புறம்—

மறுபுறம், "தமிழ்மக்களே உங்களுக்கென்ருேர் தாயகம்—மரபுவழி பிரதேசம்—இங்கு கிடையாது; நாட்டை, தமிழ்ப்பகுதி, சிங்கள பகுதியென்று பிரித்திட விடமாட்டேன்; கூட்டணியின் மரபுவழித் தாயகக் கொள்கையை நான் ஏற்றிடமாட்டேன்;" என்று அண்மையில் அறை கூவல்விடுத்திருக்கிருர் பிரதமர் ஜே. ஆர்—தேசிய அரசுப்பேரவையில்!

"தமிழர் விடுதலைக் கூட்டணியினரே! இனக்கலவரத்தினுல் பாதிக்கப்பட்டு மலையகத்திலிருந்து வடக்கு, கிழக்குமாகாணங்களுக்கு குடிபெயர்ந்து வந்துள்ள தமிழர்களுக்கு, அங்கு நிலம் வழங்கும்படி கேட்கிறீர்கள்! வெளியாட்களை (சிங்களவர்களை) தமிழ் நிலத்தில் குடியேற்றக்கூடாதென்று கூறும் நீங்கள்,




உங்கள் ஆட்களாக—அதாவது தமிழர்களாக தமிழ்க் குருதியோடுபவர்களாக—இருந்தால் மட்டும் அங்கு குடியேற்றும்படி கூறுகிறீர்கள். இது என்ன நியாயம்? இதற்கு நான் உடன்படமாட்டேன்; காணிக்கொள்கையில் டி. எஸ். சேனநாயகாவின் கொள்கையையே பின்பற்றுவேன்!"—இதையும் அவரே கூறியிருக்கிருர்!

ஜே. ஆர். பின்பற்றப்போவதாக கூறும் 'டி. எஸ்.' காணிக்கொள்கை என்ன தெரியுமா?

"தமிழ்ப்பிரதேசங்களில் சிங்களவரைக் குடியேற்றுவதற்குப் பின்னுலிருந்த அந்தரங்க நோக்கம் இறுதியில் தமிழர் பெரும்பான்மையாக விளங்கும் மாகாணத்தை சிங்களப் பெரும்பான்மை மாகாணமாக மாற்றுவதே என்பதில் ஐயமில்லை டி எஸ் சேனநாயகா மிகவும் புத்திசாலித்தனமான சிங்களத் தலைவர். அவர்ஒருபோதும் பகிரங்கமாக வகுப்புவாதம் பேசுவதில்லை ஆனல் தமிழ் பிரதேசங்களை சிங்களப் பிரதேசமாக மாற்றும் இலக்கை நோக்கி அவர் உறுதியாக உழைத்தார். இந்த இரகசியத்தை டி.எஸ். சேனநாயக்காவின் சகாக்களில் ஒருவரான பி. ரத்னுயக்கா, டி.எஸ் சேனநாயக்காவின் இறப்பின் பின் நிகழ்த்திய உரையொன்றில் அவிழ்த்து விட்டார்"

இப்படிக் கூறியிருப்பவர் யாரோ ஒரு வகுப்புவாதியல்ல—இன்றைக்கும் ஏக இலங்கையில் நம்பிக்கைவைத்திருக்கும் பீக்கிங் தோழர் சண்முகதாசனே தம்முடைய நூல் ஒன்றில் 'டி. எஸ்.'ஸின் காணிக் கொள்கையின் அடிப்படை நோக்கம் என்ன என்பதை இவ்வாறு வெட்டவெளிச்சமாக அவிழ்த்து விட்டிருக்கிருர்!

எனவேதான் நண்பா, டி. எஸ்.ஸின்' காணிக்கொள்கை என்பது தமிழ் மக்களின் மரபுவழித்தாயகத்தை—தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களை— சிங்களக் குடியேற்றத்தினுல் கபளீகரம் செய்யும் கொள்கை! தமிழ் பேசும் மக்களுக்கென்ருெரு தாயகம் இல்லாமற்செய்யும் கொள்கை! இதையே பிரதமர் ஜே. ஆர்—வருங்கால சர்வாதிகார ஜனுதிபதி ஜே. ஆர்.—பின்பற்றுவாரென்ருல், அவரது ஆட்சிக்காலத்திலேயே தமிழ் சமுதாயம் அழிந்து விடும்!

ஆம், ஓர் இனத்துக்கு உடலாக விளங்குவது அதன் வாழ்விடம்; ஜீவனுக்கு இருப்பது அந்த இனத்தின் மொழி; உடலின்றி உயிர் எவ்வாறு தனித்து இயங்கமுடியாதோ — அதேபோலவே ஓர் இனத்துக்கு வாழ்விடமின்றி அந்த இனம் பேசுகின்ற மொழியும் வாழமுடியாது! எனவேதான் தமிழ் மக்களின் வாழ்விடத்துக்கு பேராபத்து சூழ்ந்து கொண்டிருக்கிறது என்னும்போது—நமது விடுதலைப் போராட்டத்தை விரைவுபடுத்தவேண்டிய நிலையிலே இருக்கிருேம் என்பதே பொருளாகும்!

பிரதேசத்துக்கு — தாயகத்துக்கு மட்டுமல்ல—நமது தமிழ் மொழிக்கு, நமது இனத்தின் தனித்துவத்துக்கு—ஆபத்துவந்திருக்கிறது. ஆம், ஏகாதிபத்திய மொழியான சிங்களம், நம் செந்தமிழ் மரபு அழித்திடும் செந்தீயாக 'இணைப்புமொழி' யென்ற போர்வையில் நமது பாடசாலைகளில் புகுத்தப்படுகிறது; நமது மாணவச் செல்வங்களின் தொண்டைக்குள் வலிந்து திணிக்கப்படுகிறது!

1956ம் ஆண்டு—ஏகாதிபத்திய ஆட்சி மொழியாக சிங்களம் அரசபீடமேறிய நாளிலிருந்து— இன்றுவரை தமிழ்ப்பிரதேசத்து பாடசாலைகளுக்குள் சிங்களத்தைதிணிப்பதற்கு ஆட்சிக்கு வந்த அரசுகள் காலத்துக்குக் காலம் மேற்கொண்ட ஒவ்வொரு தந்திரோபாயங்களையும் தமிழ் சமுதாயம் கிளர்ந்தெழுந்து எதிர்த்து முறியடித்தே வந்திருக்கிறது. கடந்த 22ஆண்டுகளாக, நாம் நடத்தி வரும் மொழிப்போராட்டத்தில் ஆதிக்கச் சிங்களத்தை தமிழ் பிரதேசத்துக்குள் நுழைய விடாமல்—தமிழ் பாடசாலைகளுக்குள் புக விடாமல்—தடுத்து நிறுத்துவதல் வெற்றியீட்டி வந்திருக்கிருேம். தமிழ் ஈழத்து அறிஞர்கள், ஆசிரியர்கள். கல்விமான்கள், மாணவச் செல்வங்கள் அனைவருமே சிங்களத் திணிப்பை முறியடிப்பதிலே—மொழிப்போராட்டத்திலே அன்றுமுதல் இன்றுவரை முன்னணிவகித்து வருகின்றனர். இந்த நிலையில் எதிர்ப்பு இயக்கம் சற்று சோர்ந்திருக்கும் தருணம் பார்த்து சோரமாக நம் எல்லைக்குள் நுழைந்து, தமிழினத்தின் பண்பாட்டையும் தனித்துவத்தையும் மேய முனைகிறது ஆதிக்கச் சிங்களம்! செந்தமிழ் மரபு காத்திட, தனித்துவம் பேணிட, மும்மொழித்திட்டத்தை நாம் எப்படியும் முறியடித்திடவேண்டும்; இணைப்புமொழியென்ற உருவில் வரும் ஏகாதிபத்தியச் சிங்களத்தை நாம் நிராகரித்திடவேண்டும். இது நமது இளம் மாணவர்கள், பெற்ருர்—தமிழ் மக்களின் கைகளிலேயே தங்கியிருக்கிறது. இதுவே நமது இனத்துக்கு உடனடி ஆபத்து—எப்படியும் தடுத்து நிறுத்தப்படவேண்டிய ஆபத்து!

ஆங்கில நாட்டில் இலத்தீன்மொழி அரசோச்சியபோது அதனை விரும்பாத கல்விக்கூடத் தலைமை ஆசிரியர் ஒருவர்—(Head Master OF The Merchant Taylors School) தமது மொழிப்பற்றை பின்வருமாறு வெளிப்படுத்தினுராம்:-

"கல்வியின் பொருட்டு ஒரு மொழிக்கு அடிமையாவது அடிமைத்தன்மைகளுள் பெரியதேயாகும். பிறமொழிகளைக் கற்பதனுல் மிகுந்த நேரத்தை இழக்கிருேம்; பிற மொழியால் பெறும் அதே செல்வத்தை நம்மொழியில் குறைந்த காலத்தில் பெறலாம்; நம்முடைய மொழி நம் உரிமையையும் விடுதலையையும் வெளிப்படுத்துகிறது; இலத்தீன் மொழி நம்முடைய அடிமைத் தன்மையையும் இழிவையும் நினைவூட்டுகிறது; உரோம் நகரை விரும்புகிறேன்; ஆனுல் இலண்டன் மாநகரை அதனினும் மிகுதியாக விரும்புகிறேன். இத்தாலியைப் போற்றுகிறேன்; ஆனுல் இங்கிலாந்தை அதனினும் மிகுதியாகப் போற்றுகிறேன். இலத்தீனை நான் மதிக்கிறேன்; ஆனுல் ஆங்கிலத்தை நான் தொழுகின்றேன்." (I honour the Latin, but I worship the English)

இந்த ஆசிரியர் கூறியது போலவே- நம்முடைய அடிமைத் தன்மையையும், இழிவையும் நினைவூட்டுகிற மொழியாக நம்மீது ஆதிக்கம் செலுத்தி அடிமைப் படுத்தும் எஜமான மொழியாக சிங்களம் நுழைகிறது.எனவே எதுவரினும்; என்ன நிகழ்ந்திடினும், செங்களம் காண நேர்ந்திடினும் சிங்களத்தைஎதிர்போம்- செந்தமிழைக் காப்போம்; தமிழ் ஈழத்தையும் தமிழ் மொழியையும், எமது இனமரபையும் உயிர் கொடுத்தும் காப்போம் என்ற அந்த உறுதி மொழிகளை இப்பொங்கல் நாளில் நம் நெஞ்சில் இருத்துவோம்! அஞ்சாது செயல் படுவோம்!

அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம்

# தை பிறந்தது!

தை மலர்ந்து விட்டது — தமிழர் புத்தாண்டு பிறந்து விட்டது. வாடிக்கிடந்த தமிழர் உள்ளமெல்லாம் வருங்காலத்தை மிகுந்த நம்பிக்கையுடன் எதிர் நோக்கியபடி தைத்திருநாளை வரவேற்கின்றன! விரக்தியும் வெறுப்பும், ஏது செய்வோம் என்ற ஏக்கமும் பூடுப் பொடிந்த நிலையும் மாறி, நாளை நமதே எனகிற திடசித்தமும் புதிய உறுதிப்பாடும் வைராக்கியமும் தமிழனுடைய நெஞ்சிலே வேரோடும் திருநாள்தான் தைத்திருநாள்—தைப்பொங்கல் பெருநாள்! இதுவே தமிழர் வாழ்விலே ஒரு பொன்னுள்!

இதனுல் தான் தை பிறந்தால் வழி பிறக்கும் என்று ஒரு முதுமொழி தமிழர் மத்தியிலே நெடுங்காலமாக வழங்கி வருகிறது!

தமிழர் தம் வாழ்வில் கொண்டாடும் விழாக்கள் பலவுண்டெனினும், தைத்திருநாள் தருகின்ற எழுச்சியும், சுவையும் பயனும் உணர்ச்சியும், மன நிறைவும் வேறு எந்த விழாவும் தருவதில்லை! சாதி கடந்த விழாவாக—சமயம் கடந்த விழாவாக—தமிழினத்தின் தேசியத் திருநாளாக விளங்கிடுவது தைத்திருநாள் ஒன்றே! உழவர்களுக்கேயுரிய ஒரு விழாவாக பொங்கல் விழா இருந்த போதிலும், அது தமிழ் மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து ஒன்றுக இணைக்கின்ற பிணைக்கின்ற உயர் தனிச்சிறப்புடைய ஒரேயொரு விழா என்ற தன்மையை தமிழ் கூறும் நல்லுலகெங்கும் அது அடைந்து விட்டது!

எனவேதான் தைத்திருநாள்—பொங்கல் திருநாள்—உலகத்தமிழர்களின் ஒரு பெரும் தேசியத்திருநாள் என்று கூறுகிறேம். அதுமட்டுமன்றி உலகத்தமிழர்களின் ஒப்பற்ற வழிகாட்டியாம் திருவள்ளுவரின் ஆண்டும் பொங்கலன்றே—அதாவது தை முதல் நாளன்றே தொடங்குவதால் அதன் சிறப்பு உயர்ந் தோங்கிநிற்கிறது!

உலகத்தமிழர்களின் ஒப்பற்ற தேசியத் திருநாளான இப்பொங்கல் நாளில்—தைத்திருநாளில் — ஈழத்தமிழர்களாகிய நாமும் நமது கண்ணீரைத்துடைத்துக்கொண்டு புதிய நம்பிக்கையுடன் — வைராக்கியத்துடன்—இமயம் போல எழுவோம்! இறுதி வெற்றி எமக்கே என்ற பூரண நம்பிக்கையுடன் நமது இலட்சியப் பாதையிலே தொடர்வோம்!

தைத்திருநாளிலிருந்து தமிழர் உள்ளங்களை மூடியிருக்கும் அடிமைத் தனமான எண்ணங்கள் அடியோடு மடியட்டும்!

அச்சம், பயம், கோழைத்தனம், பொருமை, பொச்சரிப்பு தன்னலம் போன்றவை வேரோடு சாயட்டும்!

சாதி வேறுபாடு, தீண்டாமை, சீதனம், குறுகிய ஊர்ப்பிரிவினை ,மாநிலப் பிரிவினை, போன்ற கண்மூடி வழக்கங்கள் அனைத்தும் மண்மூடிப்போகட்டும்!

முதலாளித்துவமும், சுரண்டலும் முற்றுக முடியட்டும்!

சிங்களவர்களும் தமிழர்களும் ஒரே நாட்டினர் என்ற பழைய சிந்தனை பஞ்சாய்ப் பறக்கட்டும்!

நாம்—ஈழத்தமிழர்கள்—தனிநாட்டினர், தமிழ் ஈழ நாட்டினர்—சிங்கள சிறீலங்காவிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள்; என்ற எண்ணம் நம் ஒவ்வொருவரிடத்தும் வளரட்டும்!

அடிமை விலங்கைப் பொடிபொடியாக்கிடும் ஆர்வத்தீ நம நெஞ்சில் சுடர்விட்டு எரியட்டும்!

விடுதலை, விடுதலை, விடுதலையொன்றே நம் சிந்தனை முழுவதும் செறிந்து நிற்கட்டும்!

தங்கமாமணித் தமிழ் ஈழமாம் நம் தாயகத்தை மீட்பது ஒன்றே நம் பேச்சும் மூச்சும் செயலுமாகட்டும்!

'சுதந்திரத் தமிழ் ஈழம்' என்ற முழக்கமே நமது மூல மந்திரமாக எப்பொழுதும் நம் நாவில் ஒலிக்கட்டும்!

'செந்தமிழ்ஈழம்' என்கின்றபோதில்—தேன்வந்து பாயும் நம் காதினிலே!

ஆம், தையும் பிறந்துவிட்டது—நாம் செல்லவேண்டிய வழியும் தெரிகிறது!

பாதை தெரிகிறது—பயணத்தை தொடர்வோம்!

வழியிலே வருகின்ற இடர்கண்டு அஞ்சோம்!

வீர சுதந்திரம் வேண்டி நின்றேம் வேறென்று கொள்ளமாட்டோம்!

இந்த உணர்வினை — உறுதியை தைத் திருநாளில் தமிழ்மக்கள் பெறுவார்களாக!

# மும்மொழித் திட்டத்தை முறியடித்தே தீருவோம்!

## தமிழ்தியாகிகள் நினைவுதினக் கூட்டத்தில் தலைவர்கள், இளைஞர்கள் போர் முரசு!

மும்மொழித்திட்டம் என்ற போர்வையின் கீழ் தமிழ்ப்பாடசாலைகளில் சிங்களத்தை திணிக்கும் கல்வியமைச்சரின் செயலைக் கண்டித்தும், சிங்களத்தை திணிக்கும் சர்வாதிகார ஏகாதிபத்திய நடவடிக்கையை எதிர்த்து தமிழினம் கிளர்ந்தெழுந்துபோராடும் என்றும் தைபத்து தமிழ்மாநாட்டுத் தியாகிகள் நினைவாக யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் 10-1-78மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய தமிழர் விடுதலைக்கூட்டணி பா. உக்களும், தமிழ் இளைஞர்பேரவை முன்னணித் தலைவர்களும் கடுமையாக எச்சரிக்கைவிடுத்தனர்.

பேராசிரியர் நேசையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில்கல்வியமைச்சரின் மும்மொழித்திட்டமும், சிங்களத் திணிப்புமே கார சாரமானதாக்குதலுக்குள்ளானது, இக்கூட்டத்தில் காவலூர் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

"தமிழ் மக்கள் 1956ம் ஆண்டிலிருந்து சிங்களத் திணிப்பை எதிர்த்துப் போராடி வருகிருர்கள். காலத்துக்கு காலம் தமிழ்ப் பாடசாலைகளில் வெவ்வேறு உருவங்களில் சிங்களத் திணிப்பை நடத்துவதற்கு சிங்கள அரசுகள் எடுத்த முயற்சிகள்யாவும் நமது இளைஞர்களால் முறியடிக்கப்பட்டு வந்திருக்கின்றன. 1966ம் ஆண்டு ஈரிய கொல்லை கொண்டுவந்த மும்மொழித்திட்டத்தை அன்று தமிழரசுக்கட்சி எதிர்த்து தடுத்துநிறுத்தியது. இன்று எல்லோரும் ஏறி இளைத்த குதிரையில் சக்கடத்தார் ஏறி சறுக்கி விழுந்த கதையாக நிசங்கா விஜயரத்தின ஏறி விழுகிருர; இவரது திட்டமும் தூள் தூளாகப் போவது நிச்சயம். சிங்களம் திணிக்கப் பட்டால், அதை நிச்சயம் தமிழ் இளைஞர்கள் பார்த்துக்கொண்டு இருக்கமாட்டார்கள். எதிர்த்து போராடியே தீருவார்கள்" என்ருர்.

தமிழ் இளைஞர்பேரவையைச் சேர்ந்த ஆ. இரகுபதி பால சிறீதரன் பேசுகையில்-தமிழ் இளைஞர்களின் வீர சுதந்திர உணர்ச்சி அணைந்து விடவில்லை. அது நீறுபூத்த நெருப்பாக இருக்கிறது. அந்தநெருப்பில், சிங்களத் திணிப்புமூலம் தொட்டுப் பார்க்க நினைக்கிருர் அமைச்சர் நிசங்கா விஜயரத்தின, அந்த நெருப்பு சுடும்போது தான் அவர் உணரப்போகிருர். தூங்கும் புலியை இடறுகிருர். கல்வியமைச்சர். இதன் பயனுக தமிழ் ஈழத்தில் ஒவ்வொரு கல்லூரியும் போர்க்களமாகப் போகிறது — ஒவ்வொரு தமிழ் மாணவனும் போர் வீரனுக மாறப்போகிருன்" என்ருர்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் (தமிழ் மகளிர் பேரவை பொதுச்செயலாளர்) பேசுகையில்,— சிங்களத் திணிப்பை தடுத்து நிறுத்த தமிழர் விடுதலைக் கூட்டணியோ அல்லது தமிழ் இளைஞர்பேரவையோ தானும் தேவையில்லை. தமிழ் மாணவர்கள் ஒவ்வொரு பாடசாலையிலும் தாமாகவே இந்த இயக்கத்தை வெற்றிகரமாக நடத்துவார்கள்" என்ருர்.

த. இளைஞர் பேரவை முன்னணித் தலைவர்களில் ஒருவரான மாவை சேனுதிராசா பேசுகையில் —சிங்கள ஏகாதிபத்திய முதலாளித்துவ அரசின் மொழித்திணிப்பை எதிர்த்துப்போராடுவதற்கு தமிழ் இளைஞர் படை தயாராகிவருகிறது. அதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. சிங்களத் திணிப்பை நாம் அனுமதித்தால், இதுகால வரை நாம் கட்டியெழுப்பிய சுதந்திர இயக்கமே ஆட்டம் கண்டுவிடும். எனவே தமிழர் விடுதலைக் கூட்டணி என்ன செய்யப் போகிறதோ எமக்குத்தெரியாது—தமிழ் இளைஞர் பேரவை தனித்து நின்று இந்த மொழிப்போரை நடத்தியே தீரும். இதில் ஈடுபட்டு மீண்டும் சிறை செல்வதென்ருல் அதற்கும் நாம் தயாராகவே களத்தில் குதிக்கவிருக்கிறேம்" என்று போர் முரசொலித்தார்.

கிளிநொச்சி பா. உ. திரு. வி. ஆனந்தசங்கரி பேசுகையில்,— "கல்வியமைச்சர் நமது எதிர்ப்பையும் மீறி சிங்களத்தை நமது பாடசாலைகளிலே புகுத்துவாராஞல், நிச்சயம் நாம் சும்மா இருக்கமாட்டோம். களத்தில் குதிப்போம். மற்றவர்களை களத்தில் இறக்கிவிட்டு, நாம் ஓடி ஒளியமாட்டோம்; நாமும் களத்தில் குதிப்போம்." என்ருர்.

கூட்டணி செயலதிபரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில், தமிழ் ஈழம் முடிந்த முடிவென்றும், அதில் திரும்பிப்பார்க்க இடமேயில்லையென்றும் குறிப்பிட்டு இன்றைய அரசியல் நிலையை விளக்கினுர்.

### தெரிவுக்குழுவும் தமிழர் கூட்டணியும்

அரசியலமைப்புத் தெரிவுக்குழுவில்கூட்டணிபா.உக்கள் அங்கம் வகிக்க வேண்டுமென்ற கருத்தைத் அதுபற்றி ஆராயக்கூடிய நடவடிக்கை குழுவில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித்தலைவர் திரு அ.அமிர்தலிங்கமும் ஏனைய பெரும்பாலான கூட்டணி பா.உக்களும் கடுமையாக எதிர்த்தனர். அதேவேளையில் முன்னுள் மூதவை உறுப்பினர் திரு. சு. நடராசா தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்க வேண்டுமென்ற கருத்தை ஆதரித்தார். இதுவே உண்மை. இது சில பத்திரிகைகளில் வேறு விதமாக வெளியிடப்பட்டிருந்ததால், உண்மை நிலையை உணர்த்துமுகமாக 7-1-78ல் கல்லாற்றில் கூடிய கூட்டணி நடவடிக்கைக்குழு, பத்திரிகை [illegible] விடுத்தது.


அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றேம்.

மில்க்வைற் மேலுறைகளின் பெறுமதி-

1. மாதாந்தச் செய்தி ஒன்று
அல்லது வெளியீடுகளில் ஒன்று
அல்லது காந்திக் கலண்டர் --

நீல சோப் உறை 10 அல்லது நீம் சோப் உறை 2 அல்லது
பார் சோப் உறை 2 ,, சலவைப்பவுடர் உறை 2 ,,
மெடிகேட்டட்சோப் உறை 2

2. பொலிதீன் பெரிய பை
அல்லது சுவாமிப் படம் ஒன்று--

நீல சோப் உறை 100 அல்லது நீம் சோப் உறை 10 அல்லது
பார் சோப் உறை 10 அல்லது மெடிகேட்டட் உறை 10 ,,
சலவைப் பவுடர் உறை 10

3. துவாய் ஒன்று --

நீல சோப் உறை 500

வியாபாரிகளுக்கு விசேட பரிசு;
72 சவர்க்காரஞ் சுற்றி வரும் உறை 50 அல்லது
36 சவர்க்காரஞ் சுற்றி வரும் உறை 100 அல்லது
30 சதம் சோப் 50 உறைஅனுப்பி
துவாய் ஒன்று பெற்றுக் கொள்ளலாம்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
யாழ்ப்பாணம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சுயநிர்ணய உரிமையின் கீழ் நாம் கோருவது சுதந்திரத்தமிழ்ஈழமே"



## பொங்கலன்று செல்வா நினைவாலய அடிக்கல் நாட்டு விழா!

தைத் திருநாளாம் பொங்கல் திருநாளன்று (14-1-78) பிற்பகல் 4மணிக்கு யாழ் நகரில் தமிழ் ஈழத் தந்தை செல்வா எரிதழலோடு சங்கமமாகிய அதே இடத்தில் அவருக்கு எழுப்பப்படவிருக்கும் நினைவாலயத்துக்கு அடிக்கல் நாட்டப்படுகிறது. பேராசிரியர் நேசையா தமிழ் ஈழ நாட்டுப் பண் ஒலிக்க அடிக்கல் நாட்டுவார். இந்தக் காட்சியைக் கண்டு மகிழ பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் பொங்கலன்று யாழ்நகரில் அன்று கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மூதறிஞர் செல்வா, சிங்களத்தை தமிழ் பாடசாலைகளில் ஒரு பாடமாக புகட்டுவதை இறுதி மூச்சுவரை எதிர்த்து வந்தவரென்பதும், மும்மொழித் திட்டத்தை அவர் கடைசிவரை ஏற்க மறுத்தவரென்பதும், தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழிகளும் தமிழ் மாணவர்களுக்கு போதுமானது என்ற கருத்தில் அவர் பிடிவாதமாக இருந்து வந்ததும் இச்சமயத்தில் நினைவு கூரத்தக்கது.

நினைவாலய அடிக்கல் நாட்டு விழா பற்றி தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவைச்சேர்ந்த திரு. க. சச்சிதானந்தன் தகவல் தருகையில் — இந்த விழாவுக்கு வரும்படி சிறீலங்காவின் பிரதமருக்கோ, ஜனாதிபதிக்கோ விசேட அழைப்பு ஏதும் அனுப்பப்படவில்லையென்றும், இதுபற்றி சில பத்திரிகைகள் தவறான தகவல்களை வெளியிட்டுள்ளன என்றும், தந்தை செல்வாவுக்கு நினைவாலயம் நிறுவப்படுவதை சிங்கள சிறீலங்காவுக்கும் தமிழ் நாட்டுக்கும், ஏனைய உலகநாடுகளுக்கும் அறிவிக்குமுகமாகவே எல்லா நாட்டுத் தலைவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாகவும், பேராசிரியர் நேசையா அவர்களே அடிக்கல் நாட்டுவார் என்றும் தெரிவித்தார்.

## இடம்பெயர்ந்தோரின் இன்ப பொங்கல்

1977 ஆவணி வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களில் அரசாங்கத்தால் விஸ்வமடுவில் குடியேற்றப் பட்ட சுமார் 170 குடும்பங்கள் ஒன்று சேர்ந்து தோழர் சு. குமாரசுவாமி தலைமையில் 14-1-1978 காலை 10 மணியளவில் பொங்கல் விழாவை கொண்டாடவுள்ளனர். வடமகாணத்தின் பல பிரமுகர்களும் கலந்து இப் பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாட உதவுவார்களெனத் தெரியவருகிறது.

## லண்டன் கல்லூரி நூலகங்களில் 'சுதந்திரன்'

"ஈழத்தின் தமிழினத்தின் பிரச்சினைகளைப்பற்றியும் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் பற்றியும் துணிகரமாக எழுதிவருகின்ற ஒரேயொரு ஏடு சுதந்திரன். சுதந்திரன் ஏடு, லண்டனில் தமிழ் மாணவர்கள் பயிலும் ஒவ்வோர் ஆங்கிலக்கல்லூரியின் நூல் நிலையத்திலும் போடப்படுகிறது. அங்குள்ள தமிழ் மாணவர்கள் சுதந்திரனை ஆர்வத்தோடு படித்து வருகின்றனர். இங்கும் சகல கல்லூரிகளிலுமுள்ள நூல் நிலையங்களில் சுதந்திரன் இடம்பெற வேண்டும். ஒவ்வொரு மாணவனும் மாணவியும் சுதந்திரனை தவறாது வாசிக்கவேண்டும் இதையே இங்குள்ள கல்லூரி மாணவ மாணவியருக்கு நான் கூறி வைக்க விரும்புகிறேன்."

— இவ்வாறு தமிழ் இளைஞர் பேரவையினர் நடத்திய கலந்துரையாடலொன்றில் பேசிய லண்டன் ஈழவிடுதலை இயக்க செயலாளர் திரு. எஸ்.என். கிருஷ்ணன் குறிப்பிட்டார்.

## தேவநாயகத்துக்கு கூட்டணி பதில்!

"தமிழினம் தனது தலைவிதியைத்தானே தீர்மானிப்பதே சுயநிர்ணய உரிமையாகும், இதன் அடிப்படையில் நாம் கோருவது, தமிழீழமேயன்றி வேறெதுவுயில்லை.

"தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அளித்த கட்டளை எமது தாயகத்தை மீட்டுச் சுதந்திர தமிழ் ஈழத்தை அமைக்க வேண்டும் என்பதேயாகும். எனவே தமிழ் ஈழத்தின் சம்மதமின்றி இதிலிருந்து அணுவளவும் நகர முடியாது. அதற்கு நாமும் தயாரில்லை:

"தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலம் அதன் தலைவிதியைத்தானே தீர்மானிக்கக்கூடிய உரிமை அதற்குக் கிடைக்கின்றது. அது சமஷ்டியாக, பிரதேச சுயாட்சியாக சமஉரிமையாக, இனஐக்கியமாக இருக்கலாம். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரையில் நாம் கோருவது சுதந்திரத் தமிழ் ஈழத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை"

இவ்வாறு கூட்டணி செயலதிபர்கள் திரு. அமிர்தலிங்கமும், திரு. மு. சிவசிதம்பரமும் கல்குடா பா. உ: திரு. தேவநாயகத்துக்கு பதிலளிக்குமுகமாக அறிக்கை விடுத்துள்ளனர்.

# கூட்டணி அமைப்பு வேலைகளுக்கு பெப்ரவரி 25 வரை காலக்கெடு!

## முன்னேற்றமின்றேல் தொகுதி அமைப்பாளர்கள் தூக்கியெறியப்படுவர்!

### நடவடிக்கைக்குழுவின் உறுதியான முடிவு!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தற்போதைய தொகுதி அமைப்பாளர்களுக்கு பெப்ரவரி 25ம் திகதி வரை நடவடிக்கைக் குழு காலக்கெடுவிதித்துள்ளது. பெப்ரவரி 25ம் திகதிக்குள் எத்தொகுதியிலாவது கூட்டணியின் கிளைகளை நிறுவுவதில் குறிப்பிடக்கூடிய முன்னேற்றம் காணப்படாத விடத்து, அத்தொகுதியின் தற்போதைய அமைப்பாளரை தூக்கியெறிந்து விட்டு, அத்தொகுதிக்கு புதிய அமைப்பாளரை நியமிப்பதற்கு நடவடிக்கைகுழு தக்க நடவடிக்கையை மேற்கொள்ளும்.

மேற்கண்ட தீர்மானம் 7.1,78 சனிக்கிழமை பட்டிருப்புத் தொகுதியிலுள்ள கல்லாற்றில் பட்டிருப்பு பா. உ. திரு. பூ. கணேசலிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்டது!

கூட்டணியின் புதிய அமைப்பு விதிகளுக்கேற்ப கூட்டணிக்கிளைகள் தமிழ் இளைஞர் பேரவைக்கிளைகள். தமிழ் மகளிர் பேரவைக் கிளைகள் ஆகியனவற்றை எதிர்வரும் மார்ச் 15ம் திகதிக்கு முன்பதாக புனரமைப்பு செய்யப்பட வேண்டும் என்ற தீர்மானமும் இக்கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

கூட்டணியின் தொகுதி அமைப்பாளர்களாக தற்போது அவ்வத்தொகுதி பா. உக்களே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்என்பதுகுறிப்பிடத்தக்கது கூட்டணி பா. உக்கள் இல்லாத தொகுதிகளில் பொத்துவில் தொகுதிக்கு திருவாளர் க. சிவஞானச்செல்வம், க. சிந்தாத்துரை, பொன் கோபால், ஆ. வேல்முருகு ஆகியோரும் மூதூருக்கு அ. தங்கத்துரையும், கல்குடாவுக்கு சி. சம்பந்த மூர்த்தியும், கல்முனைக்கு ஜனாப். சம்சுதீன் டாக்டர். உதுமாலெவ்வை, ஆ. வேல்முருகு ஆகியோரும், சம்மாந்துறைக்கு ஜனாப். காசிம், ஆ. வேல்முருகு, சிவஞானச் செல்வம் ஆகியோரும் அமைப்பாளர்களாக இயங்குகின்றனர்.

கற்குடா, சம்மாந்துறை பொத்துவில், கல்முனைத் தொகுதிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க முறையே பா. உக்களான கா. பொ. இரத்தினம், வி. தருமலிங்கம், சி. கதிரவேற்பிள்ளை, க. துரைரத்தினம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழுவின் இணைப்புச் செயலாளராக பட்டிருப்பு பா.உ. திரு. பூ. கணேசலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டணியின் அமைப்பை வலுப்படுத்துவதற்காக ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகள் தோறும் கூட்டணி கிளைகள் நிறுவப்பட வேண்டும். கூட்டணியில் உறுப்புரிமைப் பணமாக ஒருவர் மாதத்துக்கு ரூபா ஒன்றும், ஆறு மாதத்துக்கு ரூபா ஐந்தும், ஓர் ஆண்டுக்கு ரூபா பத்தும் செலுத்த வேண்டும்.

### கனகருக்கு கல்தா

கூட்டணியின் கட்டுப்பாட்டை மீறி பொத்துவில் தொகுதி மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை மீறி துரோகம் செய்த திரு. எம். கனகரத்தினத்தை கூட்டணியிலிருந்து வெளியேற்றுவது என்ற தீர்மானமும் பலத்த கரகோஷத்திடையே நிறைவேற்றப்பட்டது. கூட்டணிக்கு கையெழுத்திட்டுக் கொடுத்த உறுதிமொழிப்படி திரு. கனகரத்தினம் தமது பா.உ.பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என்றும் நடவடிக்கைக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானங்களை பொத்துவில் தொகுதியைச் சேர்ந்த நடவடிக்கைக்குழு உறுப்பினர்களே கொண்டு வந்தார்கள்.

### இ. தொ. கழகம் புனரமைப்பு

மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகத்தை மீண்டும் புதுப்பித்து புனரமைப்பதென்றும், இதற்குப் பொறுப்பாக மன்னார் பா. உ. திரு, சூசைதாசனையும் அவருக்கு உதவியாக யாழ் பா. உ. வெ. யோகேஸ்வரன் [illegible] இரா. சம்பந்தன் ஆகியோரையும் நியமிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இ.தொ: கழகத்தின் ஆண்டுக் கூட்டத்தையொட்டிய பூர்வாங்க நடவடிக்கைகளை கவனிக்கும் பொறுப்பு திரு. அ, தங்கத்துரையிடம் ஒப்படைக்கப்பட்டது. இது பற்றிய கூட்டமொன்றை திரு; தங்கத்துரை 19-1-78ல் கூட்டுவார்.

இ.தொ. கழகத்தின் ஆண்டுக் கூட்டத்தை பெப்ரவரி 18, 19, திகதிகளில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

### கூட்டணியின் 2-வது மாநாடு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது மாநில மாநாட்டை மன்னாரில் ஏப்ரல் 21, 22, 23ம் நாட்களில் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. கூட்டணி நடவடிக்கைக்குழுவில், டாக்டர் இல்யாஸ் (புத்தளம்) ஜனுப் மக்கீன் (மூதூர்) சட்டத்தரணி அ. குமரகுரு ஆகியோர் புதிய உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

கூட்டணியின் அடுத்த நடவடிக்கைக் குழுக் கூட்டம் 21-1-78ல் கொழும்பில் நடைபெறும்.

கல்லாற்றில் நடைபெற்ற நடவடிக்கைக்குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து 7-1-78 சனிக்கிழமை மாலை களுவாஞ்சிக்குடி வீரபத்திரர் கோவில் மைதானத்தில் திரு: கு. கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் கூட்டணி பா. உக்களும், தலைவர்களும், உரை நிகழ்த்தினர் 6.1.78 வெள்ளிக் கிழமை மாலை திரு. பூ. கணேசலிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்ற கருத்தரங்கிலும் தலைவர்கள் கலந்து கொண்டு கொள்கை விளக்கம் அளித்தனர்.


பாவியுங்கள்




றோயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்றும் மோர் தயாரிப்பு

றோயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

றோயல் பேக்கிங்பவுடர்
றோயல் கஸ்டட் பவுடர்
றோயல் கோண் பிளவர்
றோயல் பிஸ் மக்ஸ்
றோயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்

சிவா இன்டஸ்றீஸ்

112 1/3 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ‘உலகெங்கும் வாழுகின்ற தமிழர்கள் ஈழத்தமிழர்களுக்கு ‘தனிநாடு’ கோருகின்றனர்!’’

## எமது பிரச்சினைபற்றி நோர்வே நாட்டுஏடு ‘பேர்ஜென் டைம்’ எழுதுகிறது!

“அண்மையில் இலங்கையில் நடந்த பயங்கரத்தாக்குதலும். பலாத்காரமும்” — ‘சிறுபான்மை இனமான தமிழர்கள் தங்களுக்கென ஒரு அரசாங்கத்தை உருவாக்க கோருகிறார்கள்’ — ‘நோர்வேயில் இருக்கும் சேர்க்கன் நொட்யெல்ப் ஸ்தாபனம் (Norwegian Church Relief) வீடுகளை இழந்த தமிழ் அகதிகளுக்கு ஒரு புதிய நகரத்தைக் கட்டிக்கொடுக்க முன்வந்துள்ளது’ — என்கிற தலைப்புக்களுடன் ஈழத்தமிழர் பிரச்சினைபற்றி நோர்வே நாட்டிலிருந்து நோர்வே ஜியன் மொழியில் வெளியிடப்படும் ‘Bergen Times’ என்ற ஏடு அண்மையில் எழுதியிருக்கிறது.

நோர்வே மொழியில் வெளியிடப்பட்டிருந்த அக்கட்டுரையை லண்டனில் இயங்கும் ஈழவிடுதலை இயக்கம் தமிழில் மொழிபெயர்த்து சுதந்திரனுக்கு அனுப்பி வைத்துள்ளது. அக்கட்டுரை வருமாறு:

கிட்டத்தட்ட 5 கோடி தமிழர்கள் உலகம் முழுதும் சுற்றி வாழுகின்றாகள். இவர்கள் இலங்கையில் வாழும் சிறுபான்மை இனமாகிய தமிழர்களுக்கு தனிநாடு கோருகின்றார்கள். இதன் பெயர் தமிழ் ஈழம் என்பதாகும். இது தமிழர்கள் ஆதிமுதல் ஆண்டுவரும் வடக்கு கிழக்கு மாகாணங்களே. ஆங்கிலேயரிடம் இருந்து விடுதலை பெற்றபின்னர் 28 ஆண்டுகள் தமிழர்கள் பெரும்பான்மை இனமாகியசிங்களவருடையகைகளை எதிர்பார்க்க வேண்டி ஏற்பட்டது. இந்தப்பெரிய இனமாகிய சிங்களம் ஒரு கோடியாகும். இவர்கள் தமிழர்களுடன் ஒப்பிடும் பொழுது ஒரு குறையும் இல்லாமல் வாழ்கின்றார்கள்.

1977ம்ஆண்டு ஆடிமாதம் நடைபெற்ற தேர்தலின் பின்னர் நடைபெற்ற கலவரம் தமிழர்களை இரத்த வெள்ளத்தில் ஆழ்த்தியது.

ஊர்காவற்துறை தொகுதியைச் சேர்ந்த இலங்கை தேசிய பேரவை உறுப்பினராயகி கா.பொ. இரத்தினம் அவர்கள் நோர்வே தமிழர் சார்பில் “பேர்கன் டைம்” (Bergen Time) பத்திரிகை மகாநாட்டில் தெரிவிக்கையில் இலங்கையில் தமிழர்கள் 19 பாராளுமன்ற அங்கத்தவர்களைக் கொண்டுள்ளனர், என்று கூறினர் அண்மைத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரான திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் சோபியா நாட்டில் நடைபெற்ற பாராளுமன்ற உச்சி மகா நாட்டில் பங்குபற்றிய பொழுது அங்கு இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை பற்றி உரை நிகழ்த்த சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. அவரால் விவரிக்கப்பட்டவைகள் சில வருமாறு:

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் ஒன்றுகூடி தங்களுக்கென ஒரு கட்சியை உருவாக்கினர்கள், இதன் பெயர் தமிழர் விடுதலைக் கூட்டணி. இக்கட்சியே இன்றைய அரசாங்கத்தின் எதிர்க்கட்சியாக விளங்குகின்றது. எங்கள் கட்சித் தலைவரின் பெயர் திரு. அ. அமிர்தலிங்கம் இவர் இன்றுஉத்தியோகபூர்வமான எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்றுள்ளார்.

ஒரு தமிழ் பிரதிநிதிக்கு இப்போ இருக்கும் அரசாங்கம் நீதி அமைச்சர் பதவி அளித்துள்ளது. இதில் இருந்து இவ்வரசாங்கம் தமிழர்களின் பிரச்சினைகளை ஆராயலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இம்முறைத் தேர்தலில் தமிழ் மக்களின் ஒற்றுமையை சிங்கள அரசாங்கததிற்கும், சிங்கள மக்களுக்கும் காட்டி எங்களுக்குரிய உரிமைகளைப் பெறுவதேயாகும். அதாவது—போர்த்துக்கேயர் ஆங்கிலேயரிடம் இழந்த அரசு உரிமையைப் பெற்று திரும்பவும் தமிழ் ஈழ ஆட்சியை உண்டாக்குவதேயாகும்.

கே: (கா. பொ, இரத்தினம் அவர்களிடம்) சிங்களவரிடமிருந்து சமாதான முடிவை எதிர்பார்க்கின்றீர்களா?

ப: கா. பொ. இரத்தினம் இல்லை. 28 வருடங்களாக எல்லா விதத்திலும் தமிழர்களை சிங்கள ஏகாதிபத்திய அரசாங்கம் ஒதுக்கியும், நசுக்கியும் தமிழர்களை இரண்டாம் தரப் பிரசைகளாக அடிமையாக்கிக்கொண்டார்கள். இதன் பின்னரும் சிங்களவருடன் எந்த வித சமாதான பேச்சும் நிகழ்த்தக் கூடிய முறையில் இல்லை. ஆனல் தமிழர்கள் தங்களுக்கென ஒரு அரசை முன்னமே வைத்து நடத்தியவர்கள். ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றிய பின்னர் தமிழ் அரசாட்சியையும் சிங்கள அரசாட்சியையும் ஆங்கிலேய ஆட்சிக்குள் கொண்டு வந்தார்கள். இதன் பின்னர் 1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தது ஆங்கிலேயர் இலங்கையை விட்டுப் போகும் பொழுது அவர்கள் இலங்கையில் இருஇனங்கள் இருப்பதை யோசிக்காமல் சிங்களவரிடமே நாடு முழுவதையும் கொடுத்துச் சென்றனர். இதனலேதான் இன்று தமிழர்களாகிய நாங்கள் எங்கள் மொழி கலாச்சாரம், சமயம் ஆகியவற்றைத் தொடர்ந்து வளர்க்க முடியாமல் கஷ்டப்படுகின்றோம். எங்கள் பிரச்சினைக்கு ஆங்கிலேயரே காரணமாகும்.

### பீதியும் பலாத்காரமும்

தமிழர்களுக்கு குடியியல் உரிமை இருந்தபோதிலும் அதையும் இல்லாமல் செய்ய சிங்கள ஏகாதிபத்திய அரசாங்கம் பல நியாயமற்ற முறைகளைக் கைக்கொண்டது. தமிழர்களில் அரைப் பங்கு மக்கள் ஏழைகளாக இருக்கின்றார்கள். இவர்கள் தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்பவர்களாகும் இவர்களின் பிரசா உரிமை பறிமுதல் செய்யப்பட்டது இதன் காரணத்தினல் தமிழ் மக்களின் பாராளுமன்ற பிரதிநிதிகளின் அங்கத்தவர் எண்ணிக்கையை பறித்துக் சொண்டது.

தமிழ் மக்களின் வசிப்பிடங்களில் சிங்களவர்களைக் குடியேற்றி தமிழர்களை சிறுபான்மை மக்களாக ஆக்க முயற்சித்துக்கொண்டு இருக்கின்றது. இதேபோல் சிங்கள மொழியை அரசாங்க மொழியாகவும் பௌத்த மதத்தை அரசமதமாகவும் ஆக்கிக்கொண்டு தமிழர்களுடைய இந்துசமயம் மற்றும் சமயங்களாகிய கிறிஸ்துவ சமயம் இஸ்லாம் சமயம் ஆகியவற்றைப் புறக்கணித்ததுடன், தமிழர்களின் கல்வி வேலைவாய்ப்பு, தமிழ்ப் பிரதேசங்களின் விருத்தி, பண முதலீடு முதலியவைகளின் மூலம் புறக்கணிக்கின்றது.

பலாத்காரம், சிறை, கற்பழிப்பு ஆகியன தமிழர்களின்மேல் பிரயோகிக்கப்பட்டது. பல தமிழ் இளைஞர்கள் நீதிநியாயம் இன்றி சிறையிலும், சுட்டுக்கொல்லப்பட்டார்கள். தமிழர்களின் அடிப்படை உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டன அத்துடன் எந்த உரிமைகளும் அங்கிகரிக்கப்படவில்லை. இதன் காரணமாக 1972ம் ஆண்டு தமிழ் மக்களின் கட்சிகள் ஒன்றுகூடி தமிழர் விடுதலைக் கூட்டணி என்று ஒரு கட்சியை உருவாக்கினர். 1972 ஆண்டில் இருந்து தமிழர்களின் பத்திரிகை சுதந்திரங்கள், பேச்சு உரிமைகள் யாவும் மறுக்கப்பட்டன;

கே: இப்பொழுதும் பத்திரிகை பேச்சு ஆகியனவற்றுக்கு தடைசெய்யப்பட்டுள்ளதா?

ப: இப்பொழுது இல்லை. ஆனல் முன்னர் மறுக்கப்படடபொழுதும் நாங்கள் எங்களுக்கென ஒரு பத்திரிகை வெளியிட்டோம். அதில் தமிழர்களின் பிரச்சினைகள் யாவும் பரப்பப்பட்டன. இப்படி இருந்தபோதிலும் இலங்கையில் வெளியாகும் எல்லாப் பத்திரிகைகளும் தமிழர்களுக்கு எதிராகவும், சிங்களவர்களுக்குச் சார்பாகவும் வெளியிடப்பட்டன. இதன் காரணத்தால் எமது கட்சியாளர்கள் ஒரு முடிவு எடுத்துக்கொண்டு குடியரசுத் தினமான மே 22 அன்று எங்கள் பிரச்சினைகள் பதிக்கப்பட்ட துண்டுப் பிரசாரங்களை மக்களுக்கு கொடுத்தோம் இதன் விளைவாக இரவோடு இரவாக துண்டுப் பிரசுரங்கள் பதிக்கப்பட்டன. இப்பிரசுரங்கள் 6 பெரிய நகரங்களில் எல்லா மக்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டன. இதை எதிர்த்த அரசாங்கம் என்னையும், இன்னும் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களையும் சிறையில்வைத்தார்கள். அங்கு நீதி, நியாயம் என்பன எதுவும் காணப்படவில்லை. பத்து நாட்களின் பின்னர் அரச நீதிபதியிடம் அனுப்பப்பட்ட பொழுது நாங்கள் விடுதலை செய்யப்பட்டோம்.

### கற்பழிப்பும் துஷ்பிரயோகமும்

இவ்வருடம் நடைபெற்ற தேர்தலின் பின்னர், நாங்கள் பெரிதும் கூடிய இன்னல்களையும் கஷ்டங்களையும் அடைந்தோம் பெரும்பாலான சிங்களவர்கள் வசிக்கும் இடங்களில் இருக்கும் தமிழர்களே கஷ்டங்களுக்குள்ளானேர். மேற்கு கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் ஆயிரக்கணக்கான தமிழர்களுக்கு சொந்தமான வீடுகள் உடமைகள் மற்றும் கடைகள் எரிக்கப்பட்டு கொள்ளையும் அடிக்கப்பட்டன. தலைநகரமான கொழும்பில் பல ஆயிரக் கணக்கான வீடுகள் எரிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் காயங்களுடனும், உதவிகள் எதுவும் இன்றியும் காடுகளுக்குள்ளால் தமிழர் வசிக்கும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வந்துசேர்ந்தனர்.

பெண்களும். குழந்தைகளும் புகையிரத வண்டி மூலம் தமிழர்கள் வசிக்கும் இடங்களுக்கு வந்துகொண்டு இருக்கையில் இடையில் பொலிசாராலும், காவல் படையினராலும் புகை வண்டிகள் நிறுத்தப்பட்டுத் தாக்கப்பட்டனர். புகையிரத நிலையங்களில் வேலைசெய்யும தமிழர்களை கொன்றுகுவித்தார்கள். பின்னர் பிரயாணம் செய்த தமிழ் பெண்களையும், இளம் கன்னிகளையும் கற்பழித்தார்கள். அவர்களின்மேல் துஷ்பிரயோகம் செய்தார்கள். அவர்களுக்கு உரிமையான உடைமைகளைக் கொள்ளை அடித்தார்கள் இதன்பொருட்டு தமிழர்கள் வசிக்கும் இடங்களில்வேலைக் கஷ்டங்களும் பொருளாதார கஷ்டங்களும் ஏற்பட்டன. அவர்களுககு எங்களால் இயன்ற உதவிகள் யாவும் யும்செய்யப்பட்டுக்கொண்டு இருக்கின்றன, இவர்கள் திரும்பவும் சிங்கள இடங்களில்போய் வேலைசெய்ய விரும்பாத காரணத்தால் அவர்களுக்கு இருப்பிடங்களும் மற்றும் பொருளாதார உதவிகளும் செய்ய வேண்டி உள்ளோம்.

### உலக நாடுகளிடம் கோரிக்கை

கே: இன்றைய நிலையில் தமிழர்கள் தங்கள் அன்றுட தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய நிலையில் இருக்கின்றார்களா?

ப: இதுவரையில் நோர்வேதான் முதன்முதலாக அகதிகளாக இருக்கும் தமிழர்களுக்கு உதவிசெய்ய முன்வந்துள்ளது! நாங்கள் நினைக்கின்றோம் இந்த உதவி எங்களுக்கு தொடர்ந்து நீடிக்கவும் நோர்வே தொடர்பு நீண்டகால தொடர்பை ஏற்படுத்தும்என்பதில் ஐயம் இல்லை.

---

### கொழும்புத்துறையில் கூட்டணி கருத்தரங்கு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தரங்கு ஒன்று, கொழும்புத்துறை இல 60 புங்கங்குளம் வீதியிலுள்ள இல்லத்தில் எதிர் வரும் சனவரி 15ஆந் திகதி ஞாயிறுக்கிழமை மாலே 6மேணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெறும். செல்வி. திலகவதி கணபதிப்பிள்ளை அவர்களின் தமிழ் ஈழ பண்ணுடன்தொடங்கும் இக் கருத்தரங்கில் திரு. சி கதிரவேற்பிள்ளை திரு. வ. ந. நவரத்தினம், பா'உ, திரு. வி. தர்மலிங்கம்பா. உ., திரு. வி. யோகேஸ்வரன் பா.உ, திரு.கோவை மகேசன், இலண்டனில் இருந்து வருகை தந்துள்ள தமிழ் ஈழ இயக்க இளைஞர் கிருஷ்ணன், திரு. கனகமனேகரன், திரு. மாவை சேனதிராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை வழங்குவார்கள். அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

---

### தமிழர் திருநாள் வாழ்த்து

அறிவுண்டு திறனுண்டு நேர்மை தானும்
அன்புடனே மிகவுண்டு வீரம் உண்டு
நெறியுண்டு தமிழரெனும் புகழுமுண்டு
நேர்ந்த பல கலையுதவும் வளமும் உண்டு
செறிவுறவே ஒற்றுமைதான் இன்மையாலே
சிறப்பான வாழ்விழந்தே சிறுமையுற்றோம்
சிறிதேனும் இதனை எண்ணிப் பார்ப்போமாயின்
சீ'பெறவே வழிபிறக்கும் திண்ணம்தானே.

ஒன்றிடுவோம் பொறுமையொடு பகைமை போக்கி
ஒரு மொழியைப் பேசுகின்ற இனம் நாம் என்றே
ஒன்றிடுவோம் வேறுபடும் துறைகள் எல்லாம்
ஒரு சிலரின் தனிச்செயல்கள் எனவொதுக்கி
ஒன்றிடுவோம் தனிச்சிறப்பைப் புகழைத் தள்ளி
ஒற்றுமைக்காம் பொதுப்பணியின் உயர்வைப் போற்றி
வென்றிடுவோம் சோர்வுதனைப் பிளவைக் காழ்ப்பை
வெல்க தமிழ் தமிழகத்தில் பொங்கல் போன்றே.

அமரர் டாக்டர் மு. வ.

● டாக்டர் மு. வ. உயிருடன் வாழ்ந்த நாட்களில் அவரது இலங்கை நண்பர் ஒருவருக்கு அனுப்பி வைத்த பொங்கல் வாழ்த்து இது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழர்கள் ஒருங்கிணைந்த காட்சி! தமிழ்ப் பண்பாட்டியக்க மாநாட்டின் மாட்சி!

அண்மையில் தமிழகத் தலைநகராம் சென்னை மாநரில் உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்க முதல் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டுக்கு பத்துக்கு மேற்பட்ட உலக நாடுகளிலுமிருந்து நூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் வந்திருந்தனர். தமிழ்ஈழத்தின் சார்பில் இந்த மாநாட்டில் கலந்துகொண்டவர்களில் இளைஞர்களான வேந்தனார் இளங்கோ, க. இராஜமனோகரன் ஆகிய இருவரும் தங்கள் உணர்ச்சிமிகு பேச்சாலும், கருத்தாலும் அனைவரது கவனத்தையும் ஈர்த்தனர். இம்மாநாடு பற்றி — திரு. க. இராஜமனோகரன் சுதந்திரனுக்கென எழுதும் கட்டுரையின் முதலாவது பகுதி இங்கு இடம்பெறுகிறது. —ஆர்.

## க. இராஜமனோகரன்

உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் என்னும் அமைப்பானது 1974ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் திகதி யாழ்ப்பாணத்திலே ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் தாய், தந்தை, பாதுகாவலர் இன்னோரன்னஎல்லாமாக 'இயங்குபவர்' குரும்பசிட்டியைச்சேர்ந்ததிரு. இரா. கனகரத்தினம் அவர்களாவார். இன்றும்இவ்வியக்கத்தின் பொதுச் செயலாளராக இயங்கி வரும் திரு. கனகரத்தினம் அவர்களின் உள்ளத்திலே பல்லாண்டு காலமாகக் 'குடைந்து' வந்தமேற்படி எண்ணங்கள், அவரால் அவ்வப்போது நாடப்பட்ட எத்தனையோ தமிழ்க் 'கலாநிதி'களாலே ஒதுக்கப்பட்டு வந்தன.

பேச்சாற்றல் சற்றுக்குறைவாகவே கைவரப்பெற்றாலும் பொதுச் செயலாளராக 'வெறுமனே விளங்காமல்' இயங்கி' வருபவரான அவருக்கு நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கென யாழ்ப்பாணம் வந்திருந்த முனைவர். சாலை இளந்திரையன் அவர்கள் கைகொடுத்துதவினார். தமிழ்ப்பண்பாடு காக்கப்பட வேண்டுமென்ற தீராக் காதலால் அவதியுற்று விரக தாபம்' மேலிடக் காணுகின்றோரையெல்லாம் நாடிய 'பேசா மடந்தை'யான கனகரத்தினம் அவர்களை முனைவரின் 'துணை கருக்கொள்ள வைத்தது. அதன் பலனாகத் தோன்றியதே மேற்படி இயக்கம் இந்த இயக்கத்தின் நோக்கு என்னவென்பதை முனைவரின் கூற்றாகவே தருகிறேன்;

"தமிழர்கள் சிறுபான்மையினர் என்ற பிரச்சனையை அதன் விளைவாக ஏற்படும் பாகுபாட்டு வெறி உணர்ச்சிப் போக்குகளையும்—அவற்றால் வேண்டாத பழைமைகளுக்கெல்லாம் மீண்டும் உயிர் கிடைக்கின்ற தீங்கையும் நேரே அணுகிப் பரிகாரம் காண முயல்கின்றது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம். இந்த நோக்கிலே தமிழப்பண்பாட்டின் வரலாற்றை மதிப்பிடவும்

அதன் நல்ல அம்சங்களை நினைவுபடுத்தி வலுப்படுத்தவும் இந்த இயக்கம் விரும்புகிறது.

சண்டையிட்டுச் சண்டையிட்டுத்
தமும் பேறிப் போனோம்
தாழ்ந்தவற்றை ஏந்தி மிகக்
களைப்பாகிப் போனோம்
பண்டை நாள்ப் போக்குகளை
மாற்றி விட வேண்டும்
பழ இருட்டில் புதுநிலவை
ஏற்றி விட வேண்டும்

என்பது தான் பண்பாட்டியக்கத்தின் நோக்கு"

இந்த இயக்கத்தின் தலைவராக மலேசியாவைச் சேர்ந்த திரு. இரா. ந. வீரப்பன் அவர்கள் இயங்குகின்றார். வெள்ளையுள்ளங் கொண்ட இவர் மலேசியாவிலே தமிழ்ப் பள்ளிகள் நிலைத்து இயங்க வேண்டுமென்பதிலே பெரிதும் பாடுபட்டு இயங்கி வரும் தமிழ் இலக்கியக் கழகத்தின் தலைவராகவும் விளங்குகின்றார்.

மேற்படி இயக்கமானது தனது முதல் மாநாட்டைத் தமிழ் நாட்டிலே 1977ம் ஆண்டு டிசம்பர்மாதம் 16ம் 17ம், 18ம் திகதிகளிலே கொண்டாடியது. முதலிரு நாட்களுக்குமுரிய நிகழ்ச்சிகள் மயிலை கற்பகாம்பாள் திருமண மண்டபத்திலும் மூன்றும் நாள் நிகழ்ச்சி வி.ஜி.பி. தங்கக் கடற்கரையிலுமாக நடைபெற்றன.

முதல் நாளான வெள்ளியன்று காலை 9-00 மணியளவில் நாதஸ்வர இசையுடன் பேராளர்கள் அனைவரும் அன்போடு வரவேற்கப்பட்டனர். புலவர் மே. வீ. வேணுகோபாலபிள்ளை அவர்களின் தலைமையிலே காலை நிகழ்ச்சிகள் யாவும் தமிழ்த் தாய் வணக்கத்துடன் ஆரம்பமானது. திரு. நா. மகாலிங்கம் அவர்கள் தமது வரவேற்புரையின் போது தமிழ்ப்பண்பாட்டின் தொன்மைபற்றி எடுத்துக் கூறி வடமொழிக்கும் தாயாக விளங்குவது தமிழே என்னும் கருத்தையும் வெளியிட்டார்.

தொடர்ந்துவந்த ம;பொ. சிவஞானம் அவர்கள் தமது உரையின் போது நாகரிகம், பண்பாடு என்ற இரு பதங்களையும் வேறுபடுத்தி விளக்கியதோடு ஈழத்தமிழரின் பிரச்சனை பற்றியும் குறிப்பிட்டார். 'இலங்கையிலே இன்று தமிழர் அடிமைகளாக்கப்பட்டு அல்லலுறுவதற்குக் காரணம் அவர்கள் தமது பண்பாட்டை மறந்தமையே. தண்டமிழ்ப்பண்பாட்டைத் தமிழன் கடைப்பிடித்து ஒழுகியிருப்பின் இன்று சிங்களவனுக்கு அடிமையாகியிருக்க மாட்டான்' என்று அவர் கூறியது சிந்திக்கற்பாலது.

அடுத்துத் தமிழ் நாட்டரசின் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்கள் தமது அரசு தமிழ் மொழி, தமிழ்ப்பண்பாடு என்பவற்றின் நலனுக்காகவே தன்னை ஈடுபடுத்தி வருகின்றதென்பதை வலியுறுத்தித் தமது வாழ்த்துரையை நல்கினார் தொடர்ந்து மலேசிய மாமுனிவர் தவத்திரு. இராமதாசர், திரு. இர. ந. வீரப்பன், திரு. இரா கனகரத்தினம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

திரு. அரு. கோபாலனின் நன்றியுரையுடன் நிறைவுற்ற நிகழ்ச்சிகள், மதிய உணவைத் தொடர்ந்து மாலை 4.00 மணியளவிலே மகாகவி கா. மு. ஷெரீப் தலைமையிலே 'பண்பாட்டுக் கதிர்' என்ற கருத்தரங்கோடு ஆரம்பமானது. இந் நிகழ்ச்சியிலே டாக்டர் சஞ்சீவி, டாக்டர். சாலினி இளந்திரையன் திரு. சொ. சிவபாத சுந்தரம் ஆகியோர் பங்கு கொண்டு சிறப்பித்தனர்,

இரண்டாம் நாளான சனியன்று காலையிலே வரகவி. எல். பி. கோவிந்தராசன் குழுவினரின் இசைப்பாடலுடன் மாநாடு ஆரம்பமானது பண்பாட்டியக்கத்தின் தலைவர் திரு. இர. க. வீரப்பன் அவர்களின் தலைமையிலே நடைபெற்ற இந் நிகழ்ச்சியின் போது தமிழக அமைச்சர் திரு. ராஜா முகம்மது அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து பேராளர்களின் ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பெற்றன.

மலேசியாவைச் சேர்ந்த திரு: முரசு நெடுமாறன் அவர்கள் 'மலேசியத்தமிழர்' என்ற தலைப்பிலே அளித்த கட்டுரையிலே அங்குள்ள தமிழர் நிலைபற்றி வெகு தெளிவாகக்காட்டியுள்ளார். இரப்பர்த்தோட்டங்களிலே தமிழர் உறுகின்ற இன்னல்களை விளக்க அவராற் குறிப்பிடப்பட்ட,

பாழுக்கு மரமெதற்குப்
பார்க்கலாம் அங்கு வந்தால்
பாலுக்கு மரமிருக்கும்
பாங்கான காட்சிகளை!
பாலென்று சொன்னேன்?
பாலில்லை, அம்மரங்கள்
பட்டையினைச்சீவி விட்டாற்
கொட்டுவது தமிழ்க்குருதி

என்ற பாடல் உள்ளத்தை தொடுவதாக அமைந்துள்ளது. மேலும்,

"ஒரு நாளைக்கும் பத்துக் காசு சம்பளத்தில் குருதியை வியர்வையாக்கினர் தமிழர். வளமான சாலைகளை அமைக்கத் தமிழ் மக்கள் சிந்திய உழைப்புக்கு அளவே இல்லை. மலேசியாவின் வளத்திற்குத் தமிழ் மக்கள் ஆற்றிய பணிகளை வரலாறு மறைக்க முடியாது" என்றும்—

'தமிழர்கள் இந்நாட்டில் உழைப்பைக் கொட்டினார்களேயன்றி தங்கள் உயர்வைப்பற்றிஎண்ணவேயில்லை என்றும்—

'நாட்டு விடுதலைக்கு முதற்குரல் கொடுத்தது பேரளவு தமிழர்கள் நிறைந்த இயக்கமான மலேசிய இந்தியக் காங்கிரசே என்று எண்ணும் போது நம் நெஞ்சம் விம்முகின்றது" என்றும் — குறிப்பிட்டுள்ள இடங்கள் நாம் ஒவ்வொருவரும் மிகவும் சிந்திக்க வேண்டியவை;

இலங்கையின் சார்பிலே பங்கு கொண்ட யான் ஈழத் தமிழர் இன்றைய நிலை' என்ற தலைப்பிலான கட்டுரையை வாசித்தேன் இலங்கை என்பது இரண்டு நாடுகளை உள்ளடக்கிய ஒரு தீவு' என்று ஆரம்பமாகி 1977ம் ஆண்டு நடைபெற்ற 'இனப்படுகொலை' வரையும் அமைந்த வரலாறு, சிங்கள ஆட்சியாளர்களின் போக்கு தமிழீழப் போராட்டம், பண்பாடு பேணப்படுவதற்கு நிலத்தின் அவசியம் என்பன யாவற்றையும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறினேன்.

மொறிசியஸ் நாட்டைச் சேர்ந்த தங்கணமுத்து, இறியூனியனைச்சேர்ந்த வி. தேவகுமாரன், பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த கனகா, ஆகியோரும் உரையாற்றினர்.

மாலை நிகழ்ச்சிகளின்போது தமிழகம், கருநாடகம் ஆகிய மாநிலங்களின் சார்பிலே முறையே சங்கு சுப்பிரமணியம் ஐ. உலகநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

புதுவை மாநிலத்தவரான திரு. நந்திவர்மன் பேசிய போது அண்மையில் இங்கு நடைபெற்ற 'இனப்படுகொலை'யின்போது புதுவையில் ஏற்பட்ட கொந்தளிப்பு நிலைபற்றி எடுத்துரைத்து தமிழீழப் போராட்டத்திற்கான தமது ஆதரவையும் வலியுறுத்தினார்.

இலங்கையின் சார்பிலே திரு. வே. இளங்கோ அவர்கள் 'ஈழத் தமிழரின் சமுதாய பொருளாதார அரசியற் பின்னணி' என்ற தலைப்பிலே கட்டுரைவாசித்தாழர். 'தரப்படுத்தல்' போன்ற இனவழிவு முயற்சிகளையெல்லாம் புள்ளிவிபரங்களோடு சுட்டிக்காட்டிய அவர் தமிழீழத்தின் பொருளாதார வளத்தையும் நன்கு விளக்கி, தமிழீழத்தின் அவசியத்தையும் வலியுறுத்திப் பேசினார்.

தொடர்ந்து திரு. கு. இராஜவேலு அவர்களின் தலைமையிலே நடைபெற்ற இலக்கியப் பண்பாட்டு அரங்கிலே டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், திரு. கி. வா. ஜகந்நாதன், சிலம்பொலி செல்லப்பன், திரு. அகிலன், திரு. க. தி. திருநாவுக்கரசு, திரு. கா. கலிய பெருமாள் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்;

ஞாயிற்றுக்கிழமை காலையிலே மாமல்லபுரம் சென்று பண்டைக்காலக் கற்கோயில்கள் முதற்கொண்டு கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் அமைக்கப்பட்ட சிற்பக் கல்லூரி வரையிலும் பார்வையிட்டோம். மாலை வி. ஜி. பி. தங்கக்கடற்கரையிலே முனைவர் சாலை இளந்திரையனின் தொடக்கவுரையுடன் மாநாடு ஆரம்பமானது. பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் தலைமையிலே நடைபெற்ற பாவரங்கத்திலே திரு. த; கோவிந்தன், முகவை இராசமாணிக்கம், திரு. ஐ. உலகநாதன், திரு. ஐ. இளவழகு, முரசு நெடுமாறன் ஆகியோருடன் தமிழீழத்தைச் சேர்ந்த திரு; வே. இளங்கோ புதுவை இரத்தினதுரை ஆகியோரும் யானும் பங்கு கொண்டு கவிகள் படித்தோம்.

அதன் பின்னர் மலேசியாவைச் சேர்ந்த திரு. ஜி. சூசை அவர்களால் மலாய் மொழியில் ஆக்கப்பட்ட திருக்குறள் திரு. கெ. து. சுந்தரவடிவேலு அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது. திரு. சுந்தரவடிவேலு அவர்களும் வாழ்த்துரை நல்கிய ஜனதா கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு. குமரி ஆனந்தன் அவர்களும் ஈழத் தமிழர் பக்கம் தமது மனிதாபிமானரீதியிலமைந்த ஆதரவைத் தெரிவித்தனர்.

புதுவை மாநில அமைச்சர் திரு. ரி. இராமச்சந்திரன் அவர்களும் எமது நிலைக்கு அனுதாபங் காட்டிப் பேசினார்.

இந் நிகழ்ச்சியின்போது பேசிய திரு. கா. கலியபெருமாள் அவர்கள் நகைச்சுவையோடு சில உண்மைகளை வெளியிட்டார். தமிழ்நாடு தவிர்ந்த ஏனைய நாடுகளிலே தமிழ்ப் பண்பாடு வளர வேண்டுமென்றால் தமிழ் நாட்டின் சில பகுதிகள் குண்டுகளாற் றகர்க்கப்பட வேண்டும் — தமிழ்நாட்டில் வெளியாகும் எந்தவொரு சினிமாப் படத்தையோ அன்றேல் ஏடுகளையோ வெளி நாடுகளில் வாழும் தமிழர் இறக்குமதி செய்யக் கூடாது. என்பன போன்ற பல உண்மைக் கருத்துகளைக் கூறினார். அன்றைய நிகழ்ச்சிகள் யாவும் ஹிந்தி மொழியில் ஒலிபரப்பான தேசிய கீதத்துடன் நிறைவுற்றன.

—தொடரும்

# தமிழ் அகதிகள் நிலைபற்றி வெளிநாடுகளில் பிரசாரம்!

## லண்டன் E. T. A. யின் பணி!

ஆவணி இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு தமிழ் ஈழத்துக்கு வந்துள்ள தமிழ் அகதிகளின் நிலைபற்றி நேரடியாக அகதிமுகாம்களுக்கு சென்று நிலைமையை கண்டறிந்த பின்னர், வண. செல்வரத்தினம் அ.ம. தி. அவர்கள் அகதிகள் நிலைகுறித்து ஆங்கிலத்தில் ஓர் அறிக்கை தயாரித்து வெளியிட்டது தெரிந்ததே. இந்த அறிக்கையை இங்கிலாந்தில் அச்சிட்டு வெளிநாடுகளுக்கு லண்டனிலுள்ள ஈழத் தமிழர் கழகம் (E. T. A.) விநியோகித்து வருகிறது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது:



## எட்டிப்பார்க்கி...

—1-ம் பக்கத் தொடர்

**தமிழ் மக்களின்** பிரச்சினைகளுக்கு, அவர்களுக்கு திருப்தி ரமானமுறையில் தீர்வு காணும்வரை மும்மொழித் திட்டத்தை ஒத்திப்போடுங்கள்—தமிழ் மொழியும் தமிழ் இனமும் அடிமைப் படுத்தப்பட்ட நிலையிலிருக்கும்வரை — வேறு எந்த மொழியையும் தமிழன் ஏறெடுத்தும் பார்க்கமாட்டான்; சிங்களம் எங்கள் தொண்டைக்குள் பலவந்தமாக திணிக்கப்பட்டால், அதை உங்கள்மீது திருப்பித் துப்புவோம் என்று 1956ம் ஆண்டே கூறிவிட்டேன்—என்றெல்லாம் நமது எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் தேசிய அரசுப் பேரவையில் கல்வியமைச்சருக்கும் அரசுக்கும் இடித்துக்கூறியபின்னரும் அதையெல்லாம் புறக்கணித்துவிட்டு, தமிழினத்தின் தன்மானத்துக்கும் விடுதலை வேட்கைக்கும் சவால்விடும் முறையில் சிங்களத்தை தமிழ் பாடசாலைகளில் திணிக்க உத்தரவு போட்டிருக்கிறார் கல்வியமைச்சர்.

வேண்டாம் இந்த விபரீதப் போக்கு என்று நம்தலைவர்கள் எச்சரித்தபின்னரும், கேளாக் காதினராக சிங்களத்தை தமிழ்ஈழ எல்லைக்குள் திணிப்பதிலே முழுமூச்சினராக ஈடுபட்டிருக்கிறது சிங்கள ஏகாதிபத்திய முதலாளித்துவ யூ. என். பி. ஆட்சி!

அதுவும்— தமிழினத்தை மீளா அடிமையாக்கிய சிங்களம் மட்டும் சட்டத்தை மாற்றமாட்டோம் என்று அறிவித்துவிட்டு, சிங்களத்தை தமிழனிடம் புகுத்தும்முயற்சியிலீடுபட்டிருக்கிறது அரசு!

தமிழ் மக்களுக்கு முந்திய அரசு ஏற்படுத்தி வைத்த புண்களை ஆற்றுவதாகக் கூறிக்கொண்டே புதிய புண்களை ஏற்படுத்த முனைகிறது யூ. என். பி. அரசு!

இந்த மொழித்திணிப்பை-தமிழினத்தின் மரபும் தனித்துவமும் அழித்திடும் ஆபத்தை—பிடிவாதமாக எதிர்த்துப் போராடுவதுஎன்று தமிழ் இளைய சமுதாயம் முடிவெடுத்துவிட்டது.

தமிழ்மாணவ அமைப்புக்களும், தமிழ் பெற்ருர் சங்கங்களும் இந்த எதிர்ப்பு இயக்கத்தை நடத்துவது பற்றி இப்போது தீவிரமாக ஆலோசித்து வருகின்றன.

தமிழ் இளைஞர்பேரவை, சிங்களத்திணிப்பை எதிர்ப்பதற்குரிய போராட்டத்திட்டங்களை உருவாக்கிவருகிறது. பாடசாலைப் பகிஷ்கரிப்பு உட்பட பல்வேறு திட்டங்கள் உருவாகிவருகின்றன.

சிங்களத் திணிப்பை வாபஸ் பெருமல்—சனவரி 28ம் திகதி கல்வியமைச்சர் நிசங்கா விஜயரத்தின தமிழ் ஈழத்துக்கு வருவாராளுல், அவரது விஜயத்தை பகிஷ்கரித்து, அவருக்கு கறுப்புக்கொடி காட்டவும் ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

மும்மொழித் திட்டத்தைப் புகுத்தும் கல்வியமைச்சருக்கு எதிராக அவர் வெளிநாடுகளுக்கு செல்லும்போது ஆங்காங்குள்ள தமிழர் இயக்கங்கள் கறுப்புக்கொடி காட்டுவது என்று ஏற்கெனவே முடிவெடுத்திருப்பது தெரிந்ததே!

## அரியாலையில் அகதிகளுக்கு காணி

இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு முகாம்களிலிருந்து அகதிகளாக வந்தபலர் காணியின்றி தவிப்பதாக அறிகிருேம். இப்படி காணியின்றி ஆங்காங்கு சிதறிக்கிடப்பவர்கள் ஒன்றுசேர்ந்து காணி கோரி ஒருமித்து விண்ணப்பித்தால் காணியைப் பெறும் வாய்ப்பு ஏற்படலாம்; அரியாலையில் காணித்துண்டுகள் பல வழங்கப்படாமல் உள்ளன. எனவே காணியின்றி தவிக்கும் அகதிகள் தங்கள் விபரங்களை உடனடியாக சுதந்திரனுக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிருேம்.


### தேவை

அச்சகமொன்றுக்கு கொம்போசிங், பைண்டிங்' மெசின் வேலை தெரிந்தவர்களும் வேலை பழக ஆர்வமுடையோரும் தேவை, விண்ணப்பிக்கவும்!—

விளம்பரப்பகுதி
194,ஏ. பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12

செல்லமகால (கொட்டாஞ்சேனை)
கிங்ஸ் (பதுளை)
றீகல் (மட்டுநகர்)

2-ம் வாரம்



கணேஷ் பிலிம்ஸ்சார் அளிக்கும்

நான் உங்கள் தோழன்

கெயிட்டி [கொட்டாஞ்சேனை] 4-வது வாரம்

முத்துராமன், ஸ்ரீகாந்த், வி. கே. ராமசாமி
தேங்காய் சீனிவாசன், ஜெயசித்ரா,
எஸ். வி. ராமதாஸ், குமாரி பத்மினி
சுருளிராஜன், எம் பானுமதி
மாஸ்டர் குமார், ஜெயவாணி
ஐ. எஸ். ஆர். கண்ணையா, ஹலம்

— நடித்த —

இன்ஸ்பெக்டர் மனைவி

கெப்பிட்டல் (கொழும்பு) 2-வது வாரம்

சிவாஜி-ஜெமினி —நடித்த—

உனக்காக நான் (கலர்)

லிடோ (யாழ்ப்பாணம்) 14-வது வாரம்

எம். ஜி. ஆர்., லதா
நடித்த —

நீதிக்கு தலை வணங்கு (ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்நகர்) 4-வது வாரம்

முத்துராமன், சுஜாதா
— நடித்த —

முத்தான முத்தல்லவோ

கிங்ஸ்லி (கொழும்பு) 9-வது வாரம்

கமலஹாசன், ரஜனிகாந்த்,
ஸ்ரீதேவி, விஜயா நடித்த-
கே. பாலச்சந்தரின்

மூன்று முடிச்சு

பிளாசா 2-வது வாரம்

கணேஷ் பிலிம்ஸ்சார் அளிக்கும்

நான் உங்கள் தோழன்


இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு, ஜனவரி மாதம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை [illegible] வெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி; யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org